
# பாலம்

ஜூன் 1998



# RAMIY RECORDS

புதிய , பழைய பாடல்களை தரமான
ஒலிப் பதிவில் உங்களிற்கு எப்போதும்
வழங்குகிறோம்.

CD தயாரிப்புக்களில் தமிழ் உலகில்
முன்னனியில் திகழும் நிறுவனம்
"ரமி"











# PAALAM

Tamil Monthly Magazine

SE - nr. 20 20 05 45

ஜுன் 1998

# பாலம்

சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



தொடர்புகட்கு:

PAALAM PUBLICATIONS
Sønder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.
Fax: + 45 97 25 22 96

ஒரு ஆண்டுக்கான சந்தா

| | |
|---|---|
| பிரான்ஸ் | – 180 FFr |
| சுவிஸ் | – 48 Sfr |
| ஜேர்மனி | – 50 Dm |
| டென்மார்க் | – 200 Dkr |
| நோர்வே | – 200 Nkr |
| இங்கிலாந்து | – 20 £ |
| கனடா | – 45 C$ |
| அவுஸ்ரேலியா | – 45 A$ |

ஏனைய நாடுகள் –20 £

அச்சுப் பதிப்பு
வாசன் அச்சகம்
லண்டன்
+ 44 181 646 2885


# அடுத்தபணி உங்கள் ளகைகளில்தான்

ஒருவரின் வாழ்வைத் தீர்மானிப்பதில் சூழல் மிக முக்கிய பங்கு வகிக்கிறதென்பது உளவியலாளர் பிராய்டின் பழைய, பிரபலமான கோட்பாடாகும். சூழலின் தாக்கத்திற்கு புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மட்டும் விதிவிலக்கென்று அவர் எங்காவது எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டிற்குள்ளும் கிடைக்கக்கூடிய சூழலுக்குள்ளாலேயே நமது மக்கள் தத்தமது வாழ்வை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கண்முன் பரந்து கிடக்கும் வாழ்வும், சூழலும் நாம் கடந்துவந்த இலக்கியங்களாலோ, திறனாய்வுகளாலோ ஏற்கனவே முன்னெதிர்வு. கூறப்பட்டவையல்ல. புதிய புலம் பெயர் சூழலுக்குள்ளால் தரிசனமாகிக் கொண்டிருக்கும் வாழ்வையும், அதன் தேவைகளையும் கருத்தில் கொண்டு, ஓர் சஞ்சிகை வடிவமைக்கப்படுவது அவசியமாகிறது. அதற்காகவே முயற்சிக்கிறோம். நாம் எதிர்பார்த்தபடியே ஒவ்வொரு இதழிலும் பாலத்திற்கான வரவேற்பு படிப்படியாகப் பெருகிச் செல்கிறது.

ஒவ்வொரு இதழ்களிலும் காலத்திற்கேற்ப காத்திரமான விடயங்களையே கொய்து கொய்து மலரை அமைக்கிறோம். புத்தம் புதிய விடயங்கள், மற்றவர்கள் சொல்லாத செய்திகள், எல்லோருக்கும் விளங்கும் பிரித்துப் பிரித்துக் காட்டும் இலகுவான நடை இவற்றை நீங்கள் காண்பதாகக் கருதினால் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. பாலத்தை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பலர் முன்வந்து தோள் கொடுக்கிறார்கள். உங்களிடமிருந்தும் அக்குரலை எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர் குழு

போராட்டத்தின் யதார்த்த நிலையை, புறநிலை உண்மைகளை மக்களுக்கு எடுத்துக்கூறுவதுடன், மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் விடுதலை உணர்வையும் ஊட்டி வளர்த்து மக்களின் கருத்துலகைக் கட்டி வளர்ப்பதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் அரியசேவை ஆற்ற முடியும்.



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.



# உள்ளே...




பக்கம்—04

ஜெயசிக்குறுய் மீது புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்கள்





பக்கம்—07

நைஜீரியா அரசியல்





பக்கம்—10

அணுகுண்டைத் தயாரித்த விஞ்ஞானி





பக்கம்—22

இன்ரநெற்றில் பிரவேசிக்கும் மூன்றாம் உலக நாடுகள்





பக்கம்—26

கேட்டோம் - சொன்னவர் போஸ்





பக்கம்—42

ஐரோப்பாவின் நீண்ட தொங்குபாலம்





பக்கம்—44

உலகக்கிண்ண உதைபந்தாட்டம்





பக்கம்—46

திரை உலகில்...

# பொல்லுக்குடுத்து அடிவாங ்குவது இதுதான்போலும்!



சாத்திரியார்

இந்த மாதம் ஒரு வரலாற்றுத் துயரை அல்லது சுமையைச் சுமந்தபடி விடிகின்றது. 1981–ம் ஆண்டு மே மாதம் 31–ம் திகதி, யாழ் கோட்டையில் தங்கியிருந்த பௌத்த சிங்களப் பேரினவாதப்படையின் குண்டர் குழாம் ஒன்று, மண்ணெண்ணை ரின்களுடனும், தீப்பந்தங்களுடனும் தமது இருப்பிடம் விட்டு வெறிபிடித்துப் புறப்படுகின்றன. யாழ் நகரில் பெருமையோடு நிமிர்ந்து நிற்கின்ற யாழ்ப்பொது சன நூல்நிலையம் அக்குண்டர் கும்பலின் இலக்கு. தமிழீழ மக்களின் அறிவுப் பொக்கிசம். தென்னாசியாவில் முதல் தர நூலகம் என்ற பெருமையைப் பெற்றது. தமிழர்களின் அறிவுத் தேடலுக்கு காமதேனுபோல் ஊற ஊறக் கொடுத்துக் கொண்டிருந்த அந்தப் பெருமையின் இருப்பிடம் அழிவையே தேடுவோரின் கைகளில் சிக்கி பற்றி எரிந்தது. அறிவிலிகளுக்குத் தெரியுமா? பகுத்தறிவற்ற இயந்திரப்பிண்டங்களுக்கு அறிவின் ஊற்று அத்தனை பரிசுத்தம் என்று எப்படித் தெரியும்? காமினி திசநாயக்கா யாழ்ப்பாணத்திலேயே அத்தருணம் தங்கியிருந்து அழிவு வேலையை ஆக்கித்தந்தவர் என்பது தெரிந்தது தான் என்றாலும், எதிரும் புதிருமாக மாறி பிரேமதாசாவும் காமினி திசநாயக்காவும் அரசியல் நடத்தியபோது, பிரேமதாசாவே அதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டது நல்ல சான்று.

இந்த மாதமும் சிங்களப்படையின் நாசக்கரம், சுதந்திரபுரத்தில் நீண்டது. தொடர் தோல்வியின் எரிச்சல்... பழிவாங்கும் கொதிப்பு.... பொதுமக்கள்மீது அதுதன் நச்சுப் பல்லைப் பதித்தது. இம்முறை அது 26 பொதுமக்களைக் காவு கொண்டது. ஒவ்வொரு கனத்த நினைவுகளுக்கும் சிங்களம் பதில் சொல்லவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகியுள்ளது. இதற்கும் சிங்களம் பதில்சொல்ல காத்திருக்கவேண்டியதுதான்.

> **ஒவ்வொரு தடவையும் வெறுங்கையுடன் போவதில்லை என்பதில் சிங்களப்படை உறுதி!!**

ஜூன் மாதம் உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டப்போட்டிகளால் களைத்துப் போய்க்கிடக்கின்றது. எங்கும் இதுபற்றியே பேச்சு. வேலைவில்லட்டிகளை விட்டு, தொலைக்காட்சி முன் மணிக்கணக்கை சிலவழிக்கின்ற காலநட்டத்தை ஏற்படுத்துவதுடன், மகிழ்ச்சியைத்தரவும் அது தவறவில்லை.

இங்கும் அங்கும் பந்தைத் தட்டி, எதிரியைப் போக்குக்காட்டிவிட்டு, எதிரியின் பாதுகாப்பு வியூகத்தைக் குழப்பி, உருவிச் சென்று கோல் இறக்குவதென்பது உதைபந்தாட்ட தந்திரம்.

இதனைக் கற்றுக்கொண்டோ அல்லது என்னவோ தெரியவில்லை.... சிறீலங்காப்படையினரும் வன்னிக்களத்தில் உதைபந்தாட்டம் விளையாடிக்கொண்டிருக்கின்றனர்.

ஜெயசிக்குறுவின் இம்முனையிலும் மறுமுனையிலும் மாறிமாறி நகர்வுகளை ஆரம்பித்து, பிரதான இலக்கை அடைய அது பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டுநிற்கின்றது. அதன் கெடுபலனோ என்னவோ தெரியவில்லை.... அது ஒவ்வொரு தடவையும் செம்மையாக வாங்கிக் கட்டிக்கொண்டு தனது எல்லை நோக்கி ஓடுவது நிலைமையாகியுள்ளது.

ஜூன்மாதப் பலன்படி சிங்களப்படைக்கு பெருத்த கெடுகாலம்.

மே மாதம் 28–ம் திகதி மூன்றுமுறிப்புக்கூடாகவும், அம்பகாமம் நோக்கியும் சிங்களப் படை முன்னேறமுயன்று, பெரும் இழப்புடன் பின்வாங்கிக்கொண்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட சிங்களப்படையினர் பலி. 20 இராணுவ உடல்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகள் கைகளுக்கு வந்தன.

மாதுபவன்
ஜூன் 98

அம்பகாமத்தில் வைத்து விரட்டியடிக்கப்பட்ட சிங்களப்படை தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் என்பது கணக்காய் இருதிசைகளில் பிரிந்து ஓட.... விரட்டிச் சென்ற புலிகள், ஓர் அணியைச் சுற்றிவளைத்துக் கொண்டனர்.... அல்லது கொன்றனர். அதிகாரிகள் உட்பட 22 பேரைக் காணவில்லை என அரசாங்கம் சொல்லிக் கவலைப்பட்டது என்பது வேறு.

சரி அதுதான் முடிந்ததென இருக்க, தனது முடிவை மாற்றிக் கொண்டு மறுமுனையில் கிளிநொச்சியில் சிங்களப்படை மீண்டும் ஒரு பாரிய நகர்வை மேற்கொண்டது. இது ஜூன் மாதம் நாலாம் திகதி.

கிளிநொச்சியை விடுதலைப் புலிகளுடன் சேர்த்து சுற்றிப்பிப்பது என்ற திட்டத்துடன் புறப்பட்டது. இருமுனையிலும்விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கின்றனர் என சிங்களப் படை பெரிதாக நினைத்திருக்காது போலும், அதுதான் வந்தவரத்தில் முகம் சிதற வாங்கிக்கொண்டது. நூறுக்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர். கையில் கிடந்த ஆயுதங்களைப் போட்டுவிட்டு.... உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சிங்களப்படை உயிரைக்காக்க ஓடியது. ஆக்கிரமிப்பாளரை விட்டுத்திரத்தி வேட்டையாடினர் புலிகள். 51 படையினரின் உடல்களையும், பெருமளவு ஆயுதங்களையும் கைப்பற்றும் அளவிற்கு களநிலவரம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

குழப்பத்தில் நகம்கடித்த ரத்வத்தை மறுமுனையில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு கட்டளையிட்டார்.

5-ம் திகதி அம்பகாமத்திலும் மூன்றுமுறிப்பில், மீண்டும் இரு பாரிய தரைநகர்வு, வழமைபோல இழப்பு... பின்வாங்கல், பத்துக்கும் மேற்பட்ட இராணுவம் உயிரிழப்பு ஆயுதங்கள் இழப்பு. மீண்டும் 6-ம் திகதி முயன்று தோற்றது சிங்களப் படை. பத்துக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட ஆறு உடல்களைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

சரிதான் என இடிந்து உட்கார நேரகாலம் இடம்தரவில்லைப் போலும்.... மீண்டும் 7-ம் திகதி இருவேறு முயற்சிகள். அம்பகாமம் நோக்கியும் மூன்று முறிப்புக் கூடாகவும் பெரும் எடுப்பு. புலிகள் சளைத்ததாகத் தெரியவில்லை. 30-க்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றனர். 14-உடல்களைக் கைப்பற்றினர். பல ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

200-க்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் காயமடைந்தனர். பெறுமதியான நவீன ஆயுதங்களைப் பெற்று, தமது படைக்கல சக்தியையும் விடுதலைப்புலிகள் பெருகிக்கொண்டனர்.

பின்னர் 17-ம்... 18 திகதிகளில் மறுமுனையில் ஆட்டம். அம்பகாமம் மூன்று முறிப்பில்... சிங்களப் படையினர் மூச்சிரைக்க அடிவாங்கிக் கொண்டிருக்கின்றனர். முடிவுற்று இந்த ஆக்கிரமிப்பு முயற்சி அடிவாங்கி வீழ்ந்து எழும்பி... மீண்டும் அடிவாங்கி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இதற்கிடையில்... இந்த மாதத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையொன்றும் எழுந்தது. அதாவது செய்தித்தணிக்கையை சிறீலங்கா



சரி... இம்முனையில் புலிகள் விடுவதாக இல்லை என உணர்ந்து... கிளிநொச்சியில்... மீண்டும் 8-ம் திகதி மற்றுமொரு ஆக்கிரமிப்பு நகர்வு... காத்திருந்த விடுதலைப் புலிகள்... ஓங்கி ஒரே அறையில்... 75-க்கும் மேற்பட்ட சிங்கள ஆக்கிரமிப்பாளர்களைக் கொன்று போட்டனர். 29 சடலங்களை பொறுக்கி எடுத்தனர். இதில்

ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார். அதாவது கிளிநொச்சியில் சிங்களப்படை பெரும் இழப்பைச் சந்தித்த 4-ம் திகதிக்கு மறுநாள், செய்திகள் அசுரசுரமாய்ப் பரவிக் கொண்டிருக்க சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இந்தச் செய்தித் தணிக்கையை அவசரமாக அறிவித்துள்ளார். இதற்கு சிறீலங்கா

தரப்பில் பல காரணங்கள் கூறப் பட்டாலும்... பிரதான காரணம் இழப்புக்களால் அரசுக்கு எதிராக சிங்கள மக்களிடம் தோன்றும் எதிர்ப்புணர்வை அடக்குவதும், தமிழ்மக்களுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் அழிவுவேலை களை மறைப்பதுமே இதன் பிர தான நோக்கமாக உள்ளது.

இது இலகுவான விடயமல்ல... செய்தித் தாபனங்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இந் தச் செய்தித் தணிக்கைக்கு கடு மையாக கண்டனம் எழுப்பிவரு கின்றன.

மனிதனின் கருத்தறிவும் கருத்து வெளியிடும் உரிமையை அது பகிரங்கமாக மீறுவதாக அவை கண்டனம் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அளவில் நடைபெறவேண்டியுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கு முன்ன தாக, ஜெயசிக்குறுவின் தற்போ தைய பிரதான இலக்காக பிரச் சாரப்படுத்தப்பட்டிருக்கும் மாங்கு ளத்தைக் கைப்பற்றி... ஒரு குறும் விழாக் கொண்டாடி தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள லாம் என சிங்கள அரசாங்கம் கண்ட கனவும் மெல்ல மெல்லக் கலைந்துவருகின்றது.

இந்த முயற்சியும் தன்னைக் கைவிடும் என உணர்ந்து கொண்ட தாலோ என்னவோ... தேர்தலைப் பிற்போடும் தனது முடிவுக்கு ஆதரவு தரும்படி எதிர்க்கட்சியி டம் சந்திரிகா அரசு கேட்டுள்ளது.

இராணுவத்தை சண்டைக் களத்தில் இருந்து மீளப் பெற முடியாதென்பது சந்திரிகாவின் விளக்கம். சந்திரிகாவினால் அண் மையில் பென்ஸ் கார்கள் கொடுத்து, தாசா செய்யப்பட்ட புத்தமதத் துறவிகளின் ஊடாகவும் இந்த வேண்டுகோள் விடுவிக்கப்பட் டது.

அதாவது... வன்னிக்களத்திலே படைவீரர்களின் தாக்குதல்களால் புலிகள் பின்வாங்கி ஓடிக்கொண்டி ருக்கின்றனர் எனவும்... இந்த நிலையில்... படையினரை வேறு வேலைகளுக்கு பயன்படுத்தக் கூடாது எனவும் அஸ்கிரிய மல் வத்தை பீடாதிபதிகளின் அனைத்து அரசியல் கட்சிகளுக்குமான வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

களநிலவரத்தை அறிந்து புரிந்து கொள்ளுகின்ற எவனும் புத்தபிக்கு களின் இந்த வேலை பென்ஸ் காரோடு சம்பந்தப்பட்டதென கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம்.

இந்தப் பீடாதிபதிகளின் ஆசி வேண்டிப் புறப்பட்டு... மூக்கு டைபட்டு விழிபிதுங்கி எப்போது உயிர்தப்பி ஊருக்குப்போவோம் எனக் கலங்கிநிற்கும் சிங்களப் படையினர்... இந்தத் துறவிகளின் அறிக்கைமீது காறியே துப்புவர்.

★★

# பழைய கார்களில் புதிய மேசைகள்!



நம்மிடமிருக்கும் பழைய கார்களை என்ன செய்யலாம் என்பது பலரிடையே உள்ள முக்கிய கேள்வியாகும். சில ருக்கோ பழையதாகிவிட்டாலும் அதிஷ்டகரமான தமது கார் களைக் கைவிட மனமே வருவ தில்லை. இவர்களின் மனோ நிலைக்கேற்ப தொழிற்பட முன் வந்திருக்கிறது 'EMR' என்னும் பெயர் கொண்ட இங்கிலாந்து நிறுவனம். சிறிய கார்களை வெட்டி மேசைபோல தயாரித்துக் கொடுக்கிறார்கள். இலகுவாக உருட்டிச் செல்ல முடிகிறது. வித்தி யாசமாகவும் இருக்கிறது என்கி றார்கள் வாடிக்கையாளர்கள். இப்படி பழைய கார்களை மேசை களாக மட்டுமல்ல வேறும் பல வடிவங்களாக செய்து விடுகிறார் கள். சிலர் கட்டில்களாக தயாரித் துள்ளார்கள். பழைய வெஸ்பா ஸ்கூட்டரை ஒருவர் மலசலகூட மாகக் கூடத் தயாரித்திருக்கிறார் என்றால் பாருங்களேன்.





## சானி அப்பாச்சாவின் மரணம்

# நைஜீரியாவில் ஜனநாயகத்தை ஏற்படுத்துமா?



ஆசிய ஆபிரிக்க நாடுகளிலுள்ள சர்வாதிகார அரசுகளில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. முதலில் கொங்கோவில் முபூட்டுவின் வீழ்ச்சி, பின்னர் ஆட்சியில் இல்லாவிட்டாலும் தூய கம்யூனிசக் கொள்கையை பரிசோதனை செய்து பார்த்த பல இலட்சம் மக்களின் மரணத்திற்குக் காரணமாயிருந்த பொல்பொற்றின் மரணம், பின் இந்தோனேசியாவில் சுகாட்டோவின் வீழ்ச்சி என்ற வரிசையில் இப்போது நைஜீரியாவின் இராணுவச் சர்வாதிகாரி சானி அப்பாச்சாவின் மாரடைப்பு மரணச் செய்தி வெளியாகியிருக்கிறது. நைஜீரியா அது எங்கே இருக்கிறது அதைப் பார்க்க நமக்கு எங்கே நேரமென ஒதுக்கி விட முடியாது. தற்போதைய சர்வதேச அரசியலின் வெப்பதட்பம் என்னவென்பதை விடிவு தேடும் புலம்பெயர் தமிழ் மக்கள் அவதானிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளாக இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தமக்குள் ஏற்படுத்தியிருக்கும் கூட்டமைப்பின் பெயர் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு என்பது அனைவரும் அறிந்ததாகும். இந்த அமைப்பில் இங்கிலாந்து, இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் அங்கத்துவம் வகிப்பதால் அதே அணியைச் சேர்ந்த நைஜீரியா நாடும் நமது சிறப்புக் கவனத்திற்குரியதாகிறது. பொது நல வாய நாடுகளின் ஒன்றியத்திற்கு ஏதாவது சக்தி இருக்கிறதா? அதனால் தமது நெருக்கடிகளுக்கு ஏதாவது சாதகமான நடவடிக்கைகள் எடுக்க முடியுமா? என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு ஈழத்தமிழரிடையேயும் இருப்பது இயல்பானது. பொதுநலவாய நாடுகளின் ஒன்றியம் நைஜீரியா இராணுவ அரசிற்கெதிராக குறிப்பிடத்தக்களவு பொருளாதாரத் தடைகளை விதித்து, தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறது. இந்த அழுத்தத்தை இதர சர்வதேச நாடுகள் மீறிச் செயற்படாது. இதனால் சீர்திருத்தங்களைச் செயற்படுத்த வேண்டியது நைஜீரியா இராணுவ ஆட்சியாளருக்கு தவிர்க்க முடியாத கட்டாயமாகி விட்டது. நைஜீரியாவில் தொழிற்பட்ட பொதுநல வாய நாடுகளின் அதிகாரம் இலங்கை விடயத்தில் எப்படியுள்ளதென்பதும் ஒப்பு நோக்கப்படவேண்டியதாகும். இதற்கு முதலில் நைஜீரியா பற்றிய அறிவு அவசியமானது.

ஆபிரிக்காவின் மேற்குப் பக்கத்தில் பெனின், கமரூன், சாட். நைகர் ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டு *923, 770* சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரந்து கிடக்கிறது நைஜீரியா நாடு. இந் நாட்டின் சனத்தொகை *119,328,000* (கணக்கீடு: ஜூலை *1995*) இங்கு *50* வீதமான மக்கள் முஸ்லீம்கள், *40* வீதமானவர்கள் கிறிஸ்தவர்கள், பத்து வீதமானோர் இதர சமயங்களைச் சேர்ந்தவர்கள். அரச கரும மொழி ஆங்கிலம். இத்தோடு ஹவுசா, யோருபா, ஈபோ, புலானி ஆகிய தேசிய மொழிகளும் உண்டு. எரிபொருள், மின்சார உற்பத்தியினால் செல்வம் கொழிக்கும் நாடு. வருடாந்த தேசிய உற்பத்தி *122.6* பில்லியன் டொலர்களாக இருப்பதால் உல



கின் கவனம் நைஜீரியா மீது எப்போதும் இருப்பதுண்டு.

நைஜீரியா 1960–ம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டது. அதன் பிறகு வந்த இராணுவ ஆட்சித் தலைமைகளில் 7–வதாக ஆட்சி செலுத்திய சானி அப்பாச்சாவே அண்மையில் மாரடைப்பால் மரணமானவர். இவரது மரணத்தின் பின்னர் புதிதாகப் பதவி யேற்றுள்ள இராணுவ ஜெனரல் அப்துல்சலாம் அபூபக்கர் பல புதிய சீர்திருத்தங்களை அறிவிப்பதாகவும் மக்களை அமைதியாக இருக்கும்படியும் கேட்டுள்ளார். பல பத்திரிகையாளர்களையும் மனித உரிமையாளர்களையும் அதற்கு முன்னுதாரணமாக விடுதலையும் செய்துள்ளார். எனினும் ஜனநாயகத்தைக் கோரும் மக்கள் கிளர்ச்சிகள் தொடர்கின்றன. பெரியளவு மாற்றங்களை எதிர்பார்க்க முடியாவிட்டாலும் குறிப்பிடத் தக்களவு மாற்றங்கள் வரக்கூடுமென்பதையும் நிராகரிக்க முடியாதிருக்கிறது.




சானி அப்பாச்சாவின் இராணுவமே தற்போதும் ஆட்சியைக் கையில் வைத்திருக்கிறது. கடந்த ஐந்தரை வருடகாலமாக நடைபெற்ற சானி அப்பாச்சாவின் சர்வாதிகார ஆட்சியே நைஜீரியாவை உலகின் கண்களின் முன் பாகத் தூக்கிப் போட்டது. நைஜீரியாவின் இராணுவ ஆட்சியாளருக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள் அப்போதைய இராணுவ ஆட்சியாளர் பா பண்டியாவை ஜனநாயக முறையிலான தேர்தல் ஒன்றை நடத்தத்தூண்டியது. வேறு வழியற்ற அவரும் தந்திரமாக 13 அரசியல் கட்சிகளைத் தடை செய்து, தேர்தலை அறிவித்தார். ஜூன் 12.1993–ல் நடைபெற்ற தேர்தலில் தெற்கு நைஜீரியாவைச் சேர்ந்த மசூட் அபியோலா என்பவர் வெற்றிபெற்றார். அதை முற்றிலும் எதிர்பாராத இராணுவ அரசு அந்தத் தேர்தலை ரத்துச் செய்தது. இதனால் மேலும் மக்கள் கிளர்ச்சியில். இறங்க; பாபண்டியா இராஜினாமா செய்ய நேர்ந்தது. இவரது ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சானி அப்பாச்சா 1993 நவம்பர் 17–ம் திகதி இராணுவச் சதி மூலம் குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். ஜூன் 22–ம் திகதி 1994–ம் ஆண்டு தேர்தலில் முறைப்படி வெற்றி பெற்ற அபியோலா தானே நாட்டின் தலைவரெனப் பிரகடனப் படுத்தினார். மறுநாள் சானி அப்பாச்சா அவரைக் கைது செய்து சிறையிலடைத்தார். அன்றிலிருந்து நாளும் பொழுதுமாக விஸ்வரூபமெடுத்தன அவரின் ஆட்சியின் அட்டூழியங்கள்.

சானி அப்பாச்சா 1943–ம் ஆண்டு செப்டம்பர் 23–ம்திகதி 'கானோ' என்ற முஸ்லீம் பகுதியில் பிறந்தார். நைஜீரியா சுதந்திரம் பெற்றபோது இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார். 1963–ல் பிரித்தானியா சென்று 'காடேற்' பயிற்சியும் பெற்றுக் கொண்டார். பின் 1980 பிரிகேடியராகவும், 1984–ல் மேஜர் ஜெனரலாகவும், 1987–ல் ஜெனரலாகவும் பதவி உயர்ந்து 1993–ல் நைஜீரியாவின் இராணுவ ஆட்சியாளராக உயர்ந்தார். தனது ஆட்சிக் காலத்தில் எல்லாவற்றையுமே தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். அபிவிருத்திக்கான பொருளாதார ஒதுக்குதலைத் தீர்மானிப்பது இவரும் இவரது மனைவியுமே என்றளவிற்கு போனது நாட்டின் ஆட்சி. இவரது ஒன்பது பிள்ளைகளும் இதில் அடக்கம். இந்தக் கறுப்புக் கண்ணாடி மனிதரைக் கண்டால் எவருமே பய பக்தியுடன் ஒதுங்கி நிற்பதே வழமை. சலுகைகளை வழங்கியும் இயலாத பட்சத்தில் பயமுறுத்தியும் இவர் தனது ஆட்சியை நடத்தினார். இவரது தனிப்பட்ட

வாழ்வையோ ஆட்சியையோ விமர்சிக்கும் சகல பத்திரிகையாளரும் சிறையில் தள்ளப்பட்டனர். தாமதமாக விழித்தெழுந்து தனது காரியாலயம் வரும் அப்பாச்சா நள்ளிரவாகும்வரை காரியாலயத்தில் இருப்பது வழமை. அதுவரை மற்றவர்களுக்கும் ஓய்வு கிடைப்பதில்லை. கடந்த 28 வருட இராணுவ ஆட்சியில் சானி அப்பாச்சாவின் காலமே மிகவும் கொடூரமானதெனக் கூறப்படுகிறது. இப்போது குறுக்குவழி மனிதரான அப்பாச்சா தனது 55–வது வயதில் மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார். இனியாவது நைஜீரியா மக்கள் 1993–ம் ஆண்டு தாம் ஜனநாயக வழியில் பெற்றுக்கொண்ட உரிமைகளை அனுபவிக்க முடியுமா? இதுவே இப்போதுள்ள முக்கிய கேள்வி. நைஜீரிய மக்களின் இந்தக் கேள்விக்கு பொதுநலவாய நாடுகளும், சர்வதேச சமூகமும் என்ன பதிலைக் கூறப் போகின்றன என்பதை அவதானித்தல் அவசியம். நைஜீரியா தொடர்பாக பொதுநலவாய நாடுகள் எடுக்கப்போகும் முடிவைக் காரணம் காட்டி சில தார்மீகக் கேள்விகளை எழுப்ப பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்கும் தமிழீழ மக்களுக்கு உரிமையிருக்கிறது. நைஜீரியாவில் நடைபெற்ற 1993–ம் ஆண்டுத் தேர்தல் நியாயமானது என்றால்; தமிழீழத்திற்கான வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் அதற்கு ஆதரவாக தேர்தலில் கிடைத்த வாக்குகளையும் ஏன் பொதுநலவாய நாடுகள் கண்டும் காணாமல் இருக்கின்றன? அந்த ஜனநாயகத் தேர்தலை சிறீலங்கா அரசு நிராகரித்தமையே தமிழீழப் போருக்கான காரணங்கள் என்பதை பொது நலவாய நாடுகளிடம் மீண்டும் எடுத்துரைக்க நைஜீரியா நல்லதோர் முன்னுதாரணமாக அமைகிறது.

**க. புவனசுந்தரம்**

# வம்பு செய்யும் வண்டு

*மலரைத் தேடி வண்டு வருவது அதன்*
*அழகைக் கண்டு அல்ல*
*அதன் தேனை மாந்தத்தான் – ஆனால்*
*சந்திரிகாவின் வானத்து வண்டு*
*மக்கள் நலமாக இருக்கிறார்களா?*
*மாணவர் கல்வி நிம்மதியில் நிகழ்கிறதா?*
*மூன்று வேளைக்கு அமுதுண்டு ஆறுகிறார்களா?*
*நிம்மதி கொண்டு நித்திரை செய்கிறார்களா?*
*என்பதை அறியவா? இல்லை!*
*அவர்களின் குருதியை குடிக்கலாம்*
*என்பதற்காவா இங்கு வருகிறாய்*
*உன் பெயர் என்ன தானியங்கி விமானமா? இல்லை*
*தாலி அறுக்கும் தந்தி விமானமா?*
*உன் வேலை என்ன வேவு வேலையா? இல்லை*
*வெறிபிடித்த வில்லன் வேலை*
*வண்டு வந்து வானில் சுழண்டால்*
*பிந்திரெண்டு விமானம் வருமா?*
*குண்டுபோட்டால் எங்கள் இனத்தின்*
*கொள்கை என்ன குன்றிவிடுமா?*
*இஸ்ரேலில் பிறந்த உனக்கு*
*இறுதிக் கிரியை ஈழத்தில்தான்*
*பறந்து பறந்து படமெடுத்தென்ன*
*பணியாரமா சுடப்போகிறாய்*
*விமானப்படையின் சென்னி*
*என்கிறதுன்னை சிங்களம்*
*புலியின் பொறியில் சிக்கி நீ*
*மங்களமாகும் செய்தி கேட்கும்*
*சிங்களம்.*

தி. சூரியகுமார்

# துரோகிகள்

பிச்சாபாத்திரம் ஏந்தாத
பிச்சைக்காரர்கள்....
எச்சில் எலும்புக்காய்– சுதந்திரத்தை
கொச்சைப்படுத்தும் விசக்கணைகள்....
இலட்சியத் தீயை வாயாலேயே...
ஊதி அணைத்துவிடவெண்ணும்
பித்தர்கள்....
க(ா)ட்சிக்கேற்ப நிறமாற்றம்
பச்சோந்திகள்....
சுதந்திரத்தின் சுகம்தெரியாத
அடிமைப் புளுக்கள்...

வேலணையூர் உஜிதன்

# அணுகுண்டைத் தயாரித்த விஞ்ஞானி!

# ஒபன் ஹீமர்!



டிக்! டிக்! டிக்

நேரம் அதிகாலை 5.26.

1945 ஜூலை 16–ம் திகதி.


உலகின் முதலாவது அணு குண்டுப் பரிசோதனைக்கு மேலும் மூன்றே மூன்று நிமிடங்கள்தான் பாக்கியிருந்தன. அமெரிக்காவின் லொஸ் அல்மோஸ் நகரத்திற்கு அண்மையில் உள்ள நியூ மெக் சிக்கோ என்ற பாலைவனப் பகுதி யில் ஒபன் ஹீமர் தலைமையி லான விஞ்ஞானிகள் குழு முகா மிட்டிருந்தது. திகிலாடும் கணங் கள் என்ன நடக்கும்? வெடித்தால் எப்படியிருக்கும்? உலகத்தில் எவ ருக்குமே தெரியாது. வெடிக்க வைக்கும் இடத்திலிருந்து பத்துக் கிலோமீட்டர் தொலைவில் ஓர் விஷேட பங்கரில் சக விஞ்ஞானி களோடு மறைந்திருந்தார் அணு குண்டைக் கண்டுபிடித்த விஞ் ஞானி ஒபன் ஹீமர்.

அது வெடித்தால் எப்படியிருக் கும்? அதற்குரிய அரசியல், விஞ் ஞான அனர்த்தங்களெல்லாம் ஒன்றுகூடி எப்படி விஞ்ஞானத்தை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, அதற்கு மாறாத களங்கத்தைக் கற்பித்தன என்பதை நமக்குப் புரியக்கூடிய இலகுவான வழியில் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே அணுகுண்டு பற்றி நாம் எப்படியாக சிந்திக்கலா மென்பதை வரையறை செய்து கொள்ள வேண்டும். இதற்கு ஒபன் ஹீமரின் வாழ்க்கையிலிருந்து பல நல்ல புள்ளிகளை நம்மால் திரட் டிக்கொள்ள முடிகிறது.

அணுக்கருவை நமது சாதா ரண கண்களால் பார்க்க முடி யாது. ஒரு மண்ணை எடுத்து சுமார் 25000 துணிக்கைகளாகப் பிரித்தால் அதை நமது கண்களால் சிறைப்பிடிக்க முடியாது. அணு வும் அப்படித்தானிருக்கும். அந்தச் சின்னஞ்சிறிய அணுக்கருவிற்குள் எலக்ட்ரான், நியூற்றான், புரோற் றோன் ஆகிய விசைகள் தொழிற் பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ் வளவு சிறிய அணுவை மேலும் கூறுகளாகப் பிரிக்க முடியுமா? முடியவே முடியாதென்றனர் விஞ் ஞானிகள். அது முடியாததுவரை அணுகுண்டு ஒன்றை உற்பத்தி செய்வதும் இயலாத காரியமாகும். ஆனால் 1930–களில் அணுக்கரு வைப் பிளக்கலாம்; அதன் மூலம் உலகம் இதுவரை கேள்விப்பட் டிராத அபாரசக்தியைப் பிறப்பிக் கலாம் என்ற விடயம் கண்டு பிடிக்கப்பட்டது. இதை மட்டும் எட்டிப் பிடித்துவிட்டால் போதும் கடவுளின் கடைசிச் சக்தியே மனிதனின் கைக்கு வந்துவிடு மென முடிவு கட்டியது விஞ்ஞா னம். இதன் பொருட்டு அமெரிக் காவில் அணுகுண்டை உருவாக் கும் வேலைத்திட்டம் ஆரம்பமா னது. இதற்குப் பெயர், “மான் ஹற்றன் திட்டம்” இத்திட்டத்திற்கு தலைமை தாங்கிய விஞ்ஞானியே ஒபன்ஹீமர்.

றொபேர்ட். ஜே. ஒபன்ஹீமர் 22–ம் திகதி ஏப்பிரல் மாதம் 1904–ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள நியோர்க்கில் பிறந்தார். இவருக்கு இளமையிலிருந்தே மிக விருப்பமான பாடமாக இருந்தது பௌதீகமாகும். ஹவாட் பல்க லைக் கழகத்தில் பௌதிகத்தைப் படித்துவிட்டு அதை மேலும் விருத்தி செய்வதற்காக தனது ஆராய்சிக் கல்வியைத் தொடர இங்கிலாந்து புறப்பட்டுவந்து, கேம் பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கொள்கிறார். அப்போது பௌதிகவியலில் அதுதான் உல கின் மிகச்சிறந்த பல்கலைக் கழக மாக இருந்தது. இதில் உலகின் வடிகட்டி எடுக்கப்பட்ட மிகமிகச் சிறந்த விஞ்ஞானிகள் பணியாற் றிக் கொண்டிருந்தார்கள். இவர்க ளுடன் ஒபன்ஹீமரும் சேர்ந்து கொண்டார். ஆனால் இந்தக் கூரிய அறிவுடைய விஞ்ஞானிகளு டன் பணியாற்றுவது ஹீமருக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. எந்த முயற்சியையும் அவர்கள் கேலி செய்வார்கள். இதனால் மனமுடைந்த ஹீமர் ஒரு கட் டத்தில் தற்கொலை செய்யலாம் என்றுகூட முடிவு கட்டுகிறார். அவ்வளவு தூரம் அவருடைய உளவியல் பாதிக்கப்பட்டிருந்தது. ஒருவரை ஒருவர் இழுத்து விழுத் தும் அந்தப் பாதகமான சூழலில் இருந்து விடுபட்டு ஜேர்மனிக்குப் பயணமாகிறார்.

ஜேர்மனியில் உள்ள கொற்றிங் கன் பல்கலைக் கழகத்தில் பௌதி



ஓபன் ஹீமரின் அணுகுண்டு ஆராய்ச்சிக்கூடம்

கப் பேராசிரியராகச் சேர்ந்த பின்புதான் இவரது வாழ்வில் பெரியதோர் மறுமலர்ச்சியே உருவாகிறது. மற்றவர்கள்; குறிப்பாக விஞ்ஞானிகள் மூக்கில் விரலை வைக்குமளவிற்கு அற்புதமான கட்டுரைகளையெல்லாம் எழுதி வெளியீடு செய்கிறார். பௌதிகம் என்பது மிகக் கடினமானதோர் பாடம். அதை மாணர்வகளுக்கு விளங்கப்படுத்துவதோ அதைவிட மகா கடினமான காரியம். ஆனால் ஒபன்ஹீமர் பௌதிகத்தைக் கற்பித்தால் மாணவர்கள் தேனில் சிக்கிய தும்பிகளாய் அவரை வட்டமிடுவார்கள். பௌதிகத்தை உணர்ந்து; அனுபவித்து தானே அதுவாக நின்று விளங்கப்படுத்துவதில் வல்லமை உள்ள ஆசிரியர் ஒபன்ஹீமர்.

1929–ல் இவர் ஜேர்மனியிலிருந்து அமெரிக்கா சென்று அங்குள்ள பேர்க்கிளி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இணைகிறார். இக்காலப் பகுதியில்தான் ஐன்ஸ்டைனின் உலகப் பிரசித்தமான $E=mc^2$ என்னும் கொள்கை வெளியாகிறது. (விபரங்களுக்கு பார்க்க பாலம் மே 98) இதற்கு சிறிது காலத்தின் பின் ஏற்பட்ட நாசிகளின் வளர்ச்சியும், அதனால் உண்டான அச்சமும் அணுகுண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்தை அமெரிக்கர்களுக்கு ஏற்படுத்துகிறது. அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்ற் இதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எண்ணுகிறார். இவ்வேளை ஜப்பான் அமெரிக்காவின் 'பேர்ள்' துறைமுகத்தைத் தாக்குகிறது. இதற்கு முதல் நாளே அணுகுண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும்படி சிபாரிசு செய்கிறார் ரூஸ்வெல்ற். அப்போது அமெரிக்க முப்படைகளின் ஜெனரலாக இருந்தவர் வெஸ்லி குரூவர். இவர் இந்த வேலைத் திட்டத்திற்கு தலைமை தாங்க ஒபன்ஹீமரே பொருத்த மாணவரென ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்கிறார். இப்போது ஹீமர் குடும்பத் தலைவராகி அவருக்கு பிள்ளைகளும் பிறந்து விட்டார்கள். எனினும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.



'ற்றினிற்றி' உலகின் முதலாவது அணுகுண்டு 5 கிலோ புளூட்டோனியம் கொண்டது.



அமெரிக்க ஜெனரலான வெஸ்லி குரூவருக்கும் ஒபன்ஹீமருக்கும் அருமையான புரிந்துணர்வும் நட்புரிமையும் இருந்தது. கட்டாயத்திலும்; அவசரத்திலும் நுண்பாக கலைத்துவ அறிவு மலரவே மலராது என்பதை வெஸ்லி குரூவர் தெளிவாக அறிந்திருந்தார். இதனால் அமெரிக்கச் சட்டங்களுக்கு மாறாகவே ஹீமருக்கு எண்ணற்ற உதவிகளை மனம்கோணாமல் செய்து வந்தார். ஆரம்பத்தில் 300

விஞ்ஞானிகள் இருந்தாலே போதும் திட்டத்தை நிறைவேற்றிவிடலா மென நினைத்தார்; ஆனால் திட்டமானது இறுதிக்கட்டத்தை நெருங்கியபோது 3000 விஞ்ஞானி கள் பணியாற்ற வேண்டியிருந்தது. இந்த வேலைத் திட்டத்தில் கட மையாற்றிய சகல விஞ்ஞானிக ளுமே ஜேர்மனிக்கு முன்னதா



கவே தாம் அணு குண்டை வெடிக்க வைத்துவிட வேண் டும் என்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இந்த விஞ் ஞானிகள் குழுவில் ஐன்ஸ்டைனும் பணி யாற்றினார் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

அணுகுண்டுப் பரிசோதனைக் குரிய நாள் நெருங்க நெருங்க ஒபன்ஹீமருக்கு இனம் புரியாத ஏதோ ஒன்று தன்னை எச்சரிப் பதுபோல பிரமை தட்டியது. எல் லாம் வல்ல ஏதோ ஒன்று இருக் கிறது அது இக்காரியத்தைத் தடுக்கிறது என்று கூறினார். சூழ்ந் திருந்த விஞ்ஞானிகளெல்லாம் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவரைப் பார்த்துக் கேலிசெய்த விஞ்ஞானிகளைப் போலவே கேலி செய்தார்கள். முதலாவது அணு குண்டிற்கு பெயர் 'ற்னிற்றி'. இது மறை பொருளாக நின்று வாழ்க்கை நெறியை நடத்திக் கொண்டிருக் கும் ஓர் சக்தியைப்பற்றிக் கூறும் கவிதை நூலில் இருந்து எடுக்கப் பட்ட பெயராகும். இதன் தமிழ் அர்த்தம் ஒன்றில் மூன்று ஐக்கியம் அல்லது கட வுளின் விஸ்வரூபம் என்பதாகும். உலகின் முதல் அணுகுண்டுப் பரிசோதனைத் தினத் தில் ஹீமர் தன்னிலை மறத்தோர் மனிதரா கவே இருந்தார். கார ணம் அதன் தாக்கம் எப்படியிருக்குமெனத் தெரியாத பயமும் பதட்டமும் அவரை ஆட்கொண்டிருந்தன. அணுகுண்டின் தாக் கம் இரண்டு கி.மீ. தூரம்வரை பாதிக்கு மென சிலர் கூறினார் கள். எனவே பாதுகாப் பாக பத்துக் கி.மீ தூரத்தில் கணணிகளு டன் இவர்கள் மறைந் திருந்தனர். அந்த நிமிட மும் வந்தது; மூன்று..... இரண்டு...... ஒன்று.....'படீர்'! எங்கும் ஒளிப்பிரவாகம் அந்த ஒளியை பார்க்கும் வல்லமை விழிகளுக்குக் கிடையாது. அதன் சத்தம் ஐந்து மாநிலங்களைத் தாண்டிக் கேட்டது. அதன் ரேடியோ கதிர்வீச்சை அவதா னித்தபோது விளைவு அதிர்ச்சி தந்தது. 200 மீற்றர் ஆரயுள்ள வட்ட வடிவான பகுதியெங்கும் உள்ள தரையின் மண் உருகி, கண்ணாடியாக மாறியிருந்தது. அதற்குள் அகப்பட்ட எல்லாமே பொசுங்கிச் சாம்பலாகியிருந்தன.



ஒபன் ஹீமரும் ஜெனரல் குருவசும் அணுகுண்டுப் பரிசோதனைக்குப் பின்னர்

விஞ்ஞானிகள் எல்லோரும் மகிழ்ச் சியில் குதித்தனர். அன்றுதான் முதல் முதலாக அணுகுண்டு உலகம் பிறந்ததாக அமெரிக்க இராணுவம் அறிவித்தது. ஒபன் ஹீமர் அமெரிக்க மக்களின் தேசிய வீரராகச் சித்தரிக்கப்பட்டார்.

அன்றிலிருந்தே ஹிட்லரின் படைக்கெதிராகப் பாவிப்பதற் காக வேகமாக அணுகுண்டுகள் தயாரிக்கப்படலாயின. ஆயினும் அக்குண்டுகளை வீச சந்தர்ப்பம் கொடுக்காமலே ஹிட்லர் தோல்வி யடைந்துவிட்டதால் அமெரிக்கர் களின் எண்ணம் ஈடேறவில்லை. ஆயினும் அக்குண்டை எங்காவது வீசவேண்டும் என்ற தேவை அமெரிக்காவிற்கு இருந்தது. இதற் குக் காரணங்கள் இரண்டு. அதில் ஒன்று உலகத்தின் ஈடிணையற்ற முடிசூடா அரசன் அமெரிக்கா தான் என்பதை ஐயத்திற்கிடமின்றி மற்றவர்களுக்கு நிரூபிக்க வேண் டும். இரண்டு அதை மனிதர்கள் மீது வீசினால் எப்படியான விளை வுகள் ஏற்படுமென்பதை அறிந்து கொள்ளவேண்டும். இந்த நிலை யில் சகல படைகளையும் இழந்து,

ஐன்ஸ்டைனும் ஒபன் ஹீமரும்



சரணாகதியடையும் நிலையிலிருந்த ஜப்பானில் இரண்டு நகரங்களில் அணுகுண்டை வீசி, ஒரு இலட்சம் மக்களைக் கொன்று, உலகின் ஒரு பகுதியை உயிரினமற்ற சுடுகாடாக்கியது அமெரிக்கா. இதன்பின் உலகயுத்தத்தின் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. அப்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ருமேன் ஒபன்ஹீமரை வெள்ளை மாளிகைக்கு விருந்திற்காக அழைத்தார். ஆனால் ஹீமர் அமெரிக்க ஜனாதிபதியின் விருந்தைவிட அதற்கு மேற்பட்டதோர் சக்திக்கு பதில் சொல்லவேண்டிய கட்டாயத்தை உணர்ந்தார். ட்ருமேனுக்கு பதில் சொல்லும் போது, "எனது கைகளில் இரத்தமிருக்கிறது. இப்போது விஞ்ஞானம் உலகில் மிகப் பெரிய குற்றவாளியாகிவிட்டது" என்றுகூறி மறுத்துவிட்டார்.

இதைத் தொடர்ந்தும் கூட அவர் அமெரிக்காவின் அணுவேலைத் திட்டத்திற்கு தலைமை தாங்கினார். "அணு சக்தி நல்லவர்களின் கைகளில் இருந்தால் அது உலகை வாழ வைக்கும். தீயவர்களின் கைகளில் இருந்தால் அதுவே முழு உலகையே அழித்துவிடும்!" என்பதை அவர் தொடர்ந்து கூறிவந்தார். இதை அமெரிக்க அரச அதிகாரவர்க்கம் அவ்வளவாக ரசிக்கவில்லை. இதனால் ஹீமரின் வேறும்பல சிறந்த கண்டுபிடிப்புகளை எல்லாம் சம்பந்தமே இல்லாத வேறு விஞ்ஞானிகளின் பெயர்களால் வெளியிட்டனர். இதனால் ஹீமர் மிகவும் மனமுடைந்தார். இவ்வேளை சோவியத் ருஷியா தானும் அணுகுண்டைத் தயாரித்ததாக அறிவிக்கிறது. இதன்பின் அணுகுண்டிற்கு எதிராக கதைத்துத்திரிந்த ஒபன்ஹீமரை அமெரிக்க மக்கள் வெறுக்கத் தொடங்குகிறார்கள். அவரை ஓர் கம்யூனிஸ்ட் என்று கேலிசெய்து ஓரம்கட்டுகின்றனர். அவர் இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன் அணு ஆயுதத் தவிர்ப்பு பற்றி உலக நாடுகள் பேசத் தொடங்கிவிட்டன. அப்போது ஒபன்ஹீமர் பலமாகச் சிரித்துக் கொண்டார். "இதை நீங்கள் 20 வருடங்கள் தாமதமாக ஆரம்பிக்கிறீர்கள். முதலாவது அணுகுண்டு வெடித்த மறுநாளே உலகில் உள்ள அனைவரும் ஏகோபித்து அதைப் பாவிப்பதில்லையென முடிவு செய்திருக்க வேண்டும்!" என்று கூறினார். பாலத்தில் தொடர்ந்து வெளியாகிவரும் காள்சாகன், ஐன்ஸ்டைன், போன்றவர்களை எந்தப் புற்றுநோய் பலிகொண்டதோ அதே புற்றுநோய் தான் ஒபன் ஹீமரையும் 1967–ம் ஆண்டு மாசி மாதம் 18–ம் நாளன்று பலிகொண்டது. இறக்கும்வரை அணுசக்தியை ஆக்கவேலைக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் உலகின் துன்பம், வறுமையெல்லாம் அகன்றுபோக அணுசக்தி மனித குலத்திற்கு சேவையாற்றுமென அவர் உயிரை மதியாது உறுதியாக எடுத்துரைத்தார். அதை யாருமே கேட்கவில்லை. அவர் இறக்கும் போது உலகத்திடமிருந்து கேட்ட சிரிப்பொலி கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்து கேட்ட சிரிப்பொலிபோலவே இருந்தது.



★★

## டைனசோர் விழுங்கிய வீடு!



சிறுவன் ஜோன் வாட் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். மிதிவண்டியில் வந்தவன் தனது வீட்டை டைனசோர் விழுங்கிவிட்டது! உதவி! உதவி! என்றபடி கீழே விழுந்தான். அருகில் சென்றபோதுதான் அவனுக்கு வேடிக்கை புரிந்தது அது ஓர் காற்றடைக்கப்பட்ட பலூன் டைனசோர் என்பது. அமெரிக்காவின் ஒக்லகாமா நகரத்தில் நடைபெற்ற பலூன் கண்காட்சியில் விற்கப்பட்ட பலூனை வீட்டின்மேல் போட்டு காற்றடைத்தால் இப்படியாகிவிடுகிறது. பொழுது போவதற்காக மனிதர்களிடையே எத்தனை வகையான முயற்சிகள் பாருங்கள்.

# தனிக்குடும்பமா கூட்டுக்குடும்பமா ?


காலங்காலமாய் மூன்று நான்கு தலைமுறைகள் அடங்கிய கூட்டுக் குடும்ப அமைப்பு முறையில் வாழ்ந்த எமக்கு இப் புகலிட வாழ்வானது தனிக் குடும்ப அமைப்பு முறையென்னும் வித்தியாசத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது. கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற முக்கோணத் துள் அடக்கப்பட்ட தனிக்குடும்ப அமைப்பு முறையா அல்லது கூட் டுக்குடும்ப அமைப்பு முறையா அல்லது வேறு ஏதாவது ஒரு அமைப்பா எமது புலம்பெயர் சூழலுக்கு பொருத்தமானது என்ற சர்ச்சையையே நான் இம் முறை விவாத மேடைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பல குடும்ப அங்கத்தவர்களை உள்ளடக்கிய கூட்டுக்குடும்ப அமைப்பு முறையில் தனிப்பட்ட பிரச்சினைகள் யாவும் குடும்ப அங்கத்தவர் மத்தியில் பொதுப் பிரச்சினைகள் ஆக்கப்படுகின்றன. எல்லோரும் எல்லாப் பிரச்சினை களில் தலையிடுவதும், தீர்த்து வைக்க முயற்சிப்பதும் அது தூரத்து உறவினராக இருந்தாலும் சரி பூரண உரிமை எடுத்துக் கொள்வதுமே கூட்டுக்குடும்ப அமைப்பின் பலமும் பலவீனமு மாகும். பலம் என்று இங்கு நான் கருதுவது, குடும்பத்தில் பலருக்கு செவிசாய்க்க வேண்டியிருப்பதால் வாழ்க்கைக்கு மிக அவசியமான சகிப்புத்தன்மை, பொறுமை, விட் டுக் கொடுத்தல் போன்ற பல நல்ல குணங்கள் எம்முள் தன் பாட்டி லேயே வளர இக் கூட்டுக் குடும்ப அமைப்பு முறை உதவுகிறது. அத்துடன் அன்பு, நேசம், பாசம் போன்ற உன்னதமான பண்பு களை அத்திவாரமாகக் கொண்டே இந்த அமைப்பு முறை கட்டப் படுகிறது. பலவீனம் என நான் குறிப்பிட விரும்புவது இது சுய மாக சிந்தித்து செயல்பட விடாது. அதாவது வாழ்நாள் முழுவதும்

# தேடலும்

எதிலாவது, யாரிலாவது தங்கி வாழவேண்டும் என்ற நிர்ப்பந் தத்தை இக் குடும்ப அமைப்பு முறை ஏற்படுத்துகிறது. எதைச் செய்வதென்றாலுமே குடும்ப அங் கத்தவர் அனைவருக்கும் விளக்கம் கொடுத்து, விமர்சனம் கேட்ட பின்தான் அடுத்த அடியெடுத்து வைக்க அனுமதி கிடைக்கும். இத னால் தன்னம்பிக்கை வளர்வதற்கு இக் குடும்ப அமைப்பு முறை பெரி தும் தடையாய் இருக்கிறது.

நேரம் ,காலம் விரயமாகாமல் வேகமாக ஓடிக் கொண்டிருக் கும் இப் புகலிடச் சூழ லுக்கு மேலே குறிப் பிட்ட பண்புகள் ஈடு கொடுக்குமா என்பது கேள்விக்குறியே. வளர்ந் தோர், சிறியோர் என்ற பேதம் பாராமல் எல் லோரும் சுயசிந்தனை, சுய செயல்பாட்டுடன் இயங்க வேண்டுமென்ற கட்டாயத்தை வலியுறுத் தும் ஒரு சூழலில் நாம் வாழ்கிறோம். அதற்கான பல சட்டதிட்டங்களைக் கடைப் பிடிக்க வேண்டியவர்களாய் நாம் உள்ளோம். தன்னம்பிக்கையை வளர்க்கக்கூடிய பல பயிற்சிக ளைச் சிறுவயதிலிருந்தே பரா மரிப்பு நிலையங்களிலும், பாட



# விவாத அரங்கு

# தெளிவும்

சாலைகளிலும் பெற்றுவரும் தமிழ் சிறார்கள் அன்றாடம் பல முரண்பாடுகள்களைச் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். தமிழ்ப் பிள்ளைகளின் வீட்டுச் சூழலும், புறச்சூழலும் இரு வேறுபட்டவையாக அமைந்துள்ளமையே இதற்குக் காரணம். ஊரில் வாழ்ந்தது போல் பல தலைமுறைகள் சேர்ந்து ஒரு கூரையின் கீழ் இங்கு நாம் வாழாவிட்டாலும், எங்கள் மனநிலை, நாங்கள் வளர்ந்தமுறையினால் நாம் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்ப்பதில் பெரிய வித்தியாசங்கள் ஒன்றுமில்லை. இதனால் பிள்ளை– பெற்றோர் உறவுமுறையில் பல விரிசல்கள் ஏற்படுகின்றன. பிள்ளைகளுக்கான சமூக பாதுகாப்புச் சட்டங்கள் இதற்கு இன்னும் துணைபோகின்றன. பதினெட்டு வயது வந்தவுடன் வீட்டைவிட்டு தனக்கென வாழ்க்கை அமைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு எங்கள் பிள்ளைகளின் மன நிலை மாறிவிட்டது. பிள்ளைகளைத் தமது சொத்தாக நினைக்கும் பெற்றோர், 'நான்' 'இது எனது பிரச்சினை' என சிந்திக்கும் பிள்ளைகள், தனது வேலையைத் தானே செய்ய வேண்டும் என்னும் சூழல்... இந்நிலையில் கூட்டுக் குடும்ப அமைப்பு முறை சாத்திய மாகுமா?

அடுத்து தனிக்குடும்ப அமைப்பு முறையை யோசிப்போம். இந்த அமைப்பு முறையின் நல்ல தன்மை என்னவென்றால், தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக் கொள்ளும் மனப்பக்குவம் அடைய வாய்ப்பளிக்கிறது. ஒருவரை ஒருவர் தங்கி வாழாமல் தன்னம்பிக்கைக்கு மதிப்பளித்து வாழும் பண்பு இதில் உண்டு. இதில் அன்றாட வேலைகள் யாவும் பெரும்பாலும் திட்டமிடப்பட்டும் அதற்கேற்றபடி இயங்கும் தன்மையும் சிறப்பாகப் பேணப்படுகிறது. 'நாம்', 'எமது குடும்பம்' என்பதைவிட 'நான்', எனது' என்ற குணங்கள் வளரவே தனிக்குடும்ப அமைப்பு முறை துணைபுரிகிறது. இதுவே இதன் பலமும், பலவீனமுமாகும். ஒரு கணவன் தன் சுதந்திரத்தையும், மனைவி தன் சுதந்திரத்தையும், பிள்ளைகள் தங்கள் சுதந்திரத்தையும் மீறி வேறு எந்த உணர்வுகளுக்குமே இங்கு இடம்கொடுப்பதில்லை. ஆனால் இங்கு போலித்தனங்கள் குறைவு. ஏனெனில் ஒருவருக்காகவும் ஒருவரும் நடிக்கத் தேவையில்லை. அன்பு, பாசம், தியாகம் என்ற போர்வையில் கூட்டுக் குடும்ப அமைப்பு முறையில் நடக்கும் தில்லுமுள்ளுகளுக்கு இங்கு இடமில்லை. அன்பு உண்டு, பாசமும் உண்டு, எல்லாமே தனிமனித சுதந்திரம் என்ற சொல்லுக்குப் பிறகே வருகிறது.

இப்பேர்ப்பட்ட ஒரு குடும்ப அமைப்பு முறை எனது வாழ்க்கைக்குப் பொருத்தமானதா என யோசித்தால் இயந்திரகதியில் இயங்கும் புகலிடச் சூழலுக்குப் பொருத்தமானதே எனலாம். எனினும் எமது மனங்களுக்கு ஒத்து வருமா என்பது கேள்விக்குறியே. பெரியயோரை மதித்தல், பெற்றோர் கடமை, பிள்ளைகளின் கடமை, தாம்பத்திய உறவு முறை போன்ற பல அம்சங்கள் இப்படித்தான் அமைய வேண்டும் என வரையறுத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள், இன்னும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் தமிழர்கள். காலங் காலமாய் நாம் பாதுகாத்து வந்த பல கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை விழுங்கிக் கொண்டிருக்கும் இப் புகலிடச் சூழலானது எம்மையே நாம் இழக்கக் கூடியளவுக்கு ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறது. மனிதளவில் நாம் பக்குவப்படும் வரையும் தனிக்குடும்ப அமைப்பு முறையும் பிரச்சினைக்குரியதே.

தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என்னும் இரு குடும்ப அமைப்பு முறைகளை விட பிரச்சினையில்லாத வேறு ஏதாவது அமைப்பு முறை எமது புகலிட வாழ்க்கைக்கு ஏற்றதாக அமையுமா என்று யோசிப்போம். மேற்குறிப்பிட்ட இரண்டிலுமே நல்ல தன்மைகளும், எமக்கு ஏற்பாடில்லாத தன்மைகளும் உள்ளன. இவற்றில் உள்ள நல்ல பக்கங்களைப் புரட்டிப் பார்த்து நாம் ஏன் எமக்கென பொருத்தமான ஒரு வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது? அது புலம் பெயர் வாழ் தமிழர்களால் முடியாது. ஏனெனில் பணத்துக்காகவும், போலி கௌரவத்துக்காகவும், சமூக அந்தஸ்துக்காகவும் எதையும் செய்யத் துணிந்து விட்ட பின் எல்லாமே பிரச்சினை தான். என்னைப் பொறுத்தவரையில் அன்பு, மனித நேயம் மறுக்கப்பட்டு சுயநலம் மேலோங்கி நிற்கும் இக் காலகட்டத்தில் கூட்டுக்குடும்ப முறை என்ன, தனிக் குடும்ப முறை என்ன எல்லாமே வெறும் விவாதத்துக்கு மட்டுமே என்றளவில் யோசிக்காது ஓரிருவராவது சிந்தித்தால் அதுவே இக்கட்டுரையின் மாபெரும் வெற்றியாகும்.

– மல்லீஸ்வரி

# சமூக அறிவியல் நோக்கில் நாட்டுப் புறப் பெண்கள்

சென்ற இதழின் தொடர்ச்சி......

பங்களும் புணர்ச்சிச் சிற்பங்களும் இருக்கின்றன.

நிர்வாணமாக இருக்கும் பெண் சிற்பங்களில் மனித இனத்திற்கு வளமை அளிக்கும் மார்பும், பெண்மை உறுப்பும் பெரிதாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தச் சிற்பங்களில் தலைக்குப் பதிலாக மலர் காட்டப்பட்டிருக்கிறது. 'வினஸ் பற்றி முன்பு கூறப்பட்டது. அதன் உருவங்களில் முகம் இல்லை ஆனால் அவ்வுருவங்களில் உடலுறவுக் குணங்கள் மிகுதியும் வலியுறுத்தப்பட்டது' என்கிறார் நரேந்திரநாத் பட்டாச்சாரியா.

வீனஸைப் போலவே நாகார்ஜூன் குண்டாவில் உள்ள பெண் தெய்வச் சிற்பமும் நிர்வாணக் கோலத்தில் தலையின்றி இருக்கிறது. தாராசுரம் கோவிலில் நிர்வாணக் கோலத்தில் 'சக்ராமி' என்று வழங்கும் பெண் தெய்வச் சிற்பம் இன்றும் மக்களால் வணங்கப்படுகிறது. இது போன்ற சிற்பங்கள் வட இந்தியாவில் பிதா (Bhita) கௌசாம்பி ஆகிய இடங்களிலும் உத்திரப்பிரதேசத்தில் துசி என்னும் இடத்திலும் மராட்டியத்தில் தெர் (Ter) நெவசா (Navasa) ஆகிய இடங்களிலும் இருக்கின்றன.

கேரளத்தில் தற்பொழுது கட்டப்பட்டுள்ள மலம்புழா நீர்த்தேக்கத்திலிருந்து நீர் வழிந்து செல்லும் கரையில், நீர்த் தேக்கத்திற்கு மிக அருகிலேயே நிர்வாணக் கோலத்தில் பெண்ணின் உருவத்தைப் பெரிதாகச் செய்து வைத்துள்ளனர். ஆனால் ஒரு வேறுபாடு உண்டு. இவ்வுருவத்தில் பெண்ணின் முகத்தை வடித்து வைத்துள்ளனர்.

## மழைச்சடங்கு:

வேளாண்மைக்கு மழை தேவையானது– இன்றியமையாதது. பயிர்த்தொழிலிற்குக் குறித்த பருவத்தில் பொழியவேண்டும். இது இயற்கை நிகழ்ச்சி. மழை பொழியாவிடில் என்ன செய்வது? சில நம்பிக்கையால் மழைச்சடங்கு இந்தியா முழுவதும் செய்யப்படுகிறது. இந்தியா முழுவதும் மழை பெற வேண்டி மாய வித்தைகள் செய்யப்படுகின்றன. இச்சடங்குகளைப் பெண்கள் மட்டுமே செய்கின்றனர்.

லக்னோவிற்கு அருகில் உள்ள பைர் அக்பர்பூர் எனும் ஊரில் எழுபத்தைந்து பெண்கள் தங்கள் ஆடைகளைக் களைந்துவிட்டு நிர்வாணமாக வெள்ளிக்கிழமை இரவு இரண்டு மணி நேரம் நிலத்தை உழுதனர். மழைக் கடவுளைத் திருப்திப்படுத்த என்ற செய்தி கிடைத்துள்ளது. அடுத்த கிராமத்துப் பெண்கள் இதைப் பின்பற்றிச் செல்வார்கள் என்று தெரிகிறது. இவ்வாறு செய்தால் மழைக்கடவுள் இந்திரனை மகிழச் செய்து மழை பெறலாம் என்று உறுதியாக நம்புகின்னர் இவர்கள்.

இடத்திற்கு இடம் சடங்கு செய்யும் முறை மாறுபட்டாலும் சடங்கில் பங்கு பெறுவோர் பெண்களே என்ற உண்மையைத் தமிழகத்தில் நடைபெறும் சடங்கைக் கொண்டும் உறுதிப்படுத்தலாம்.

மகப்பேறுடைய பெண்களும் கன்னிப் பெண்களும் ஊரில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று சோறு பெற்று வந்து ஒரு பெரிய மண் பாத்திரத்தில் (மிடா என்பர்) சேர்த்து உப்பில்லாமல் ஒன்றாகக் கலக்குவர். ஊரில் உள்ள அனைவரும் வந்து சிறிது பெற்று உண்பர். பிறகு வயது முதிர்ந்து பெண்கள் மாரடித்து அழுது புலம்பிய வண்ணம் சுடுகாட்டிற்குச் செல்வர். புலம்பும் பொழுது பாட்டுப் பாடுவர். சுடு காட்டிற்குச் செல்பவர்களை "மழை பொழிந்துவிடும்; காலம் செழித்துவிடும்" என்று ஆறுதல் கூறி அழைத்து வருவர். இச்சடங்கு செய்தால் அப்பொழுதோ அல்லது மறுநாளோ மழை பொழியும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இம் மழைச் சோற்றுச் சடங்கு தர்மபுரி, சேலம், கோவை, பெரியார், வடஆற்காடு, திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் நடைபெறுகிறது. அப்பொழுது பாடப்படும் பாடல்களில் ஒன்று.

"கோடை அழிய வேணும்
கொள்ளை மழை பெய்ய வேணும்
மாவு கொதிக்க வேணும்
குழந்தை பசியாற வேணும்
பூமி விளையவேணும்
புள்ளை பசியாற வேணும்"

## புணர்ச்சி சடங்கு:

வளம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செய்யப்படும் சடங்குகளில் கொடு முடியாகத் திகழ்வது 'புணர்ச்சி சடங்கு'. இச் சடங்கு உலகளாவிய ஒன்றாகப் பின் தங்கிய நிலையிலுள்ள சமுதாயத்தில் இயங்குகிறது. இது பற்றியும் நாட்டுப் புறப்பாடல் நயம்படவும் ஒளிவு மறைவின்றியும் கூறக் காணலாம்.

தமிழகக் கோயில்களில் ஆண், பெண் ஆடையின்றியிருக்கும் சிற்

தர்மபுரி மாவட்டத்தில் டெங்கனிக் கோட்டைக்கு அருகில் உள்ள பிக்கல உறல்லி எனும் ஊரில் கடவுளிடம் தங்கட்குக் குழந்தைப் பேறு வேண்டுமென வேண்டிக் கொண்ட பெண்கள் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட நாளான்று கோவிலின் புனித ஏரியில் ஒன்றாகக்கூடி நிர்வாணமாகக் குளிப்பர். கரைக்கு வந்து இலை ஆடையைமேலே போட்டுக் கொண்டு கோவிலை வருவர். அவ்வகைச் சடங்கைப் பெண்கள் நிர்வாணமாகச் செய்கின்றனர். இலை ஆடைகள் உடுத்துவது சென்னையிலிருந்து திருத்தணி செல்லும் வழியிலுள்ள பெரிய பாளையத்திலும் நடக்கிறது. இது விரிவாகத் தமிழ் இதழ்களில் வெளியாயின. இவை முன்பு நிர்வாணமாகச் செய்யும் சடங்காக இருந்திருக்க வேண்டும்.

## நிர்வாண நடனம்:

கோவை, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உள்ள தொலை தூரக் கிராமங்களில் தொடர்ந்து மழை பெய்யாது போகும்போது ஊரின் ஓரத்திலுள்ள நிலங்களில் தீட்டு நின்ற பெண்களும் கன்னிப் பெண்களும் நிர்வாணமாகத் தங்கள் பிட்டத்தை கையால் தட்டிக் கொண்டு கும்மி அடிப்பது போல் வட்டமாகச் சுற்றி வருவார்கள். இந் நிகழ்ச்சியின்போது பாடலும் பாடப்படுகிறது. இப் பாடலைப் பிறருக்கும் கூற மறுப்பதால் இதனைச் சேகரிக்க முடியவில்லை.

## பொட்டு இடுதல்:

ஊரில் நடைபெறும் எச் சடங்கிலும் திருமணமான மகளிரில் கணவனையும் குழந்தைச் செல்வத்தையும் பெற்ற பெண்கள் தான் இடம் பெறலாம். இப் பெண்கள் சிகப்பு அல்லது குங்குமப் பொட்டு நெற்றியில் இட்டுக் கொள்வர். சில வேளைகளில் மஞ்சள் பொட்டு வைத்துக் கொள்வதும் உண்டு. வேறு நிறப் பொட்டுக்கள் வைத்துக் கொள்வதில்லை.



திருமணத்திற்குமுன் மணப் பெண்ணிற்கு பொட்டு இடும் சடங்கு நடைபெறும். மாமன் (தாயின் உடன் பிறந்தார்) வைக்கின்ற பொட்டே சடங்காகக் கருதப்படுகிறது.


பல திருமணச் சடங்குகளில் மணமகள் நெற்றியில் சிகப்புப் பூசுகின்றனர். இது அவள் தன் கணவனுக்குக் குழந்தைப் பேற்றினை உறுதிப்படுத்தும் வளமுடையவள் என்பதையும் குறிக்கும் அடையாளமாகும். என்கிறார் பழம் கிரேக்க சமுதாயத்தை ஆய்ந்தறிந்த ஜி.தோம்சன்.

## சிகப்புப் பொட்டிடுதலின் உட்பொருள்:

பொட்டு வைத்துக் கொள்ளுதல் கணவனை இழந்தோருக்கில்லை; கணவனை இழந்தவள் வாழ்க்கையில் வளத்தை இழந்தவளாகிறாள். மனித இனப்பெருக்கப் பணியிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறாள். ஆகவே, இந்தச் சிகப்புப் பொட்டு கணவனைக் குறித்து அதன் வழியே வளத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது, இஃது ஒருத்திக்கு ஒருவன் என்ற சமுதாய அமைப்பில் நடைபெறுவது பல கணவர் மணமுறையுள்ள சமுதாயத்தில் பொட்டிழந்ததால் என்பதில்லை. இச்சமுதாயத்தில் பொட்டு வைத்தல் எதன் அடையாளமாக இருக்கிறது? இது நேரிடையாக வளத்தைக் குறிப்பதாகிறது. பொட்டு வைப்பதிலும் சிகப்பு பொட்டை ஏன் வைக்கிறார்கள்? என்பது மேலும் ஆய்விற்குரியதாகும்.

## விதவை:

நாட்டுப்புறப் பெண்களின் இறுதிச் சடங்கு உலகில் மனிதர்கள் பிறந்து இறப்பது வரையிலும் பல பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் கையாண்டு வருகின்றனர். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். கணவன் இருந்தால்தான் மனைவிக்கு முழு பலமும் உரிமையும் கிடைக்கும். கணவன் இறந்து விட்டால் மனைவி பொட்டிழந்து பூவிழந்து நகை நட்டுகளை இழந்து நல்ல துணிகளை இழந்து துன்பத்தில் இருக்க வேண்டி வருகின்



றது. ஆகவே நாட்டுப்புறப் பெண்கள் கணவனுக்கு முன்னால் பொட்டோடும் பூவோடும் சென்றடைவதைத் தம்முடைய பாக்கியமாகக் கருதுகின்றனர். கணவன் இறந்த பின்னால் இக் கொடூரச் செயல்களால் பாதிக்கப்படப் போகின்ற பெண்கள் புலம்பி அழுவதைக் கதைப்பாடல்கள் கூறுகின்றன.

## நாட்டுப்புற ஆய்வில் கள்ள உறவு:

கள்ள உறவு கொள்வோரைக் குறித்து நாட்டுப்புறக் கதைகள் அதிகமாக வழங்கி வருகின்றன. ஏட்டில் எழுத முடியாத அளவுக்கு கள்ள உறவுகள் குறித்துக் கொச்சையான பல கதைகள் நாட்டுப்புற மக்கள் வழக்கில் உள்ளன. பொருந்தாத திருமணங்கள் கள்ள உறவுகள் ஏற்பட வழி வகுத்தன. ஆணாதிக்கச் சமூக அமைப்பில் ஆண்



எத்தகைய உறவு கொண்டாலும் அது மிகப்பெரிய தவறாகக் கருதப் படுவதில்லை. ஆனால் பெண் முறையற்ற உறவு கொள்ளும் போது அது தண்டனைக்குரிய தாகவும், ஏளனத்துக்குரியதாகவும் கருதப்படுகிறது. ஆணின் சொத்து டமையின் ஒரு பகுதியாகவே பெண்ணினம் கருதப்படுவதால் நேரும் சிக்கலே இது.

பெண்கள் கள்ள உறவு கொள் வதனைச் சோரம் போதல் என்று குறிப்பிடுகின்றனர். கள்ளக்காத லன், சோர நாயகன், கள்ளப் புருஷன் என்று பல பெயர்களால் உறவு கொள்ளும் ஆண் குறிப் பிடப்படுகிறான். இச் சீர்கேடு பெண்ணினத்துக்கு இழுக்கு என்று கருதப்பட்டாலும் பெண்களே இதற்கு முழுக்காரணமென்று குற் றம் சாட்டமுடியாது. மணமான நிலையில்

1– கணவன் மனைவியர் அன்பு நிலையில் பொருத்தமின்மையா லும்

2– வயதுப் பொருத்தம் இன் மையாலும்

3– கணவன் பிரிந்து போவ தாலும்

4– பொருளாதார நிலையில் அல்லது உடற்கூறு நிலையில் கணவனின் இயலாமையாலும் சோரம் போதல் நிகழ்கிறது.


## நாட்டுப்புறத்தில் மாமியார்:

மாமியார் மருமகள் உறவுநிலை எந்த நாட்டிலும் சிறப்பித்துப் பேசப்படுவதில்லை. நாட்டுப்புறப் பாடல்களும் அதற்கு விதிவிலக் கல்ல. இவ்விருவருடைய உறவு நிலையைக் குறித்துச் சொல்லும் பொழுது, 'ஒரு பைக்குள் போடப் பட்ட இரு பூனைக் குட்டிகள்' என்பர். மனோதத்துவ ரீதியாக இவ்வுறவு முரணுக்குப் பல கார ணங்கள் கூறப்படுகின்றன. மாமி யாரை ஏசி மருமகளும், மரும களை ஏசி மாமியாரும் பாடுகின்ற பாடல்கள் பல இடம் பெற்றுள் ளன. மாமியாரைக் கிண்டலாக வும் வெறுத்தும் பாடியுள்ள போக்கைப் பின்வரும் சான்றுகள் மூலம் அறியலாம். 'ஆணை அடி போல அதிரசம் நூறு வச்சேன் அத்தனையும் தின்னானே அந்த உதடிதவன்' என மணமகள் கட் சியினர் கிண்டலாகச் சாடுகின்ற போக்கும் 'நாதேரி முண்டகிட்ட சின்னப்பட முடியலியே', 'புண்ணி யரைப் பெத்தெடுத்த பெருங் குரங்கே தொந்தரவு', 'மாமியார் கொடுமையினால் மஞ்சனில்லாப் பாவியானேன்' என்றெல்லாம் வெறுத்துப் பாடியுள்ள போக்கும் நாட்டுப்புறப் பாடல்களில் மாமி யார் என்ற உறவு முறை பெற் றுள்ள இடத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

தங்கவயல் டாக்டர் பெ.கணேசன்
எம்.ஏ, பி.எச்.டி, டி.எஸ்.எஸ்.சி
சமூக விஞ்ஞானி
கர்நாடகம்
இந்தியா

## தேகம் முழுவதும் 31 சில்லுகள்! மின்னல் வேகத்தில் பறந்துபோகிறார்

ஜேன்யுவாஸ் என்னும் பிரான்சியர் நான்கு ஆண்டுகளாக முயற்சியெடுத்து புதுவகையான சில்லுச் சப்பாத்துக்களைத் தயாரித்திருக்கிறார். 31 சில்லு களையும் 20 கிலோ எடையையும் கொண்ட இந்தச் சப்பாத்துக்களை உடம்பு முழுவதுமே பூட்டிக் கொள்ளலாம். மோட்டார் கார் போல வீதிகளில் ஓடலாம். படுத்தபடியே பாம்புபோல வேகமாக ஊர்ந்து செல்லலாம், படிக்கட்டுக்களில் ஏறிச் செல்லலாம் ஒன்று இரண்டல்ல பல விதமாக இதைப் பாவிக்க லாம். இது எந்த நிறுவனத்தினதும் வெளியீடல்ல ஓர் தனிமனிதனின் ஆவலும் அதற்கான வடிவமுமே யாகும். இதைப் பார்க்கும் எவரும் காலமும் தேவை களும் விரைவாக மாறி வருவதை நிராகரிக்கவே முடியாது.



# பொது அறிவுப் போட்டி இல: 4

பாலம் சஞ்சிகை நிறுவனத்தினரால்நடாத்தப்படும் அறிவுப் போட்டி இல—4. ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். தொடர்ந்து நடைபெறும் 10 அறிவுப்போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் வாசகர்களுக்கு பாலம் சஞ்சிகையினரால் சிறந்த பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும். அதிகூடிய புள்ளிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெறும் பட்சத்தில் குலுக்கல் முறையில் வாசகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் விடைகளை எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும். விடைகளை கீழே உள்ள படிவத்திலேயே நிரப்பி அனுப்பவும்.

## கேள்விகள்:

1- கிரேக்க நாட்டிலிருந்து பாரதம் வரை சாம்ராச்சியம் அமைத்த மன்னன் யார்?

2- 1990-ம் ஆண்டு உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட நாடு எது?

3- மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்றவர் யார்?

4- இந்தோனேசியாவின் தலைநகரம் எது?

5- இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள நீரிணையின் பெயர் என்ன?

### பொது அறிவுப் போட்டி இல:4

பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்ற திகதி:- ...........................

விடைகள்:

1 ..................................................

2 ..................................................

3 ..................................................

4 ..................................................

5 ..................................................

பெயர்:- ........................................

முகவரி:- ......................................

........................................

........................................

தொலைபேசி இல.:- ........................

# சுப்பிரீம்கோட் சுறுக்கர் அம்மான்

## கொழும்பிலிருந்து குமுறுகிறார்

வணக்கம் பிள்ளையள்.... நீங்கள் எல்லாரும் எப்பிடிப் பிள்ளையள் சுகமாகத்தானே இருக்கிறியள். பிரச்சினையளைப் பெரிதுபடுத்தாமல்..... சோதனைகளை சாதனையாக்க வேணும் எண்டு வாழ்ந்தால்..... பிரச்சினைக்கு இடமே இல்லை. இது நான் எப்பவும் எடுத்துவிடுகிற வசனம்.

தீர்வுப் பொதிகளை தயாரித்துக் கொண்டிருந்த அம்மையார் அரசு திடீரென்று இப்ப தணிக்கை செய்து தணிந்து கொள்ளுகினம். இதுவும் சமாதானத்திற்கான செய்தித் தணிக்கை எண்டு சொல்லுவா போலக்கிடக்கு,

கிளிநொச்சிப் பக்கமும் சரியான புயலடிக்குது பிள்ளையள். முண்டியடிச்சுப் போனவை கனபேர் காத்தோடை அள்ளுப்பட்டுப் போயிற்றினமாம். அதை மூடி மறைக்கத்தான் தணிக்கை எண்டு பரவலாய் சொல்லுகினம். ஆனால் பிள்ளையள் அவசரம்.. அவசரமாய் கொழும்பில கூவித்திரியும் அம்புலன்ஸ் வண்டிகள் அல்லோ விசயத்தைப் புட்டு வைக்குதுகள். இருபத்தியோராம் நூற்றாண்டை எட்டிப் பார்க்கிற மக்களின்ரை கண்ணில.... இந்த தணிக்கை மண் தூவ ஏலாது பாருங்கோ....! அதோடை பிள்ளையள் கிளிநொச்சியிலை ஏற்பட்ட அகோர இழப்பை ஈடுசெய்ய.... சுதந்திரபுரத்தின் வான் பகுதியை சுற்றி வளைத்து தாக்கிப் போட்டு..... தங்களின்ரை ஆத்திரத்தை தணிச்சிருக்கினம்.... ஆனால் பொதுமக்கள்தான் இரையாகிப் போனார்கள்.

அடுத்தது பிள்ளையள் குடாநாட்டுப் பக்கம் பலபேர் குலை நடுங்கத் துவங்கியிருக்கினம்... சங்கிலியன் படையால நித்திரையும் குறைவாம்.... தெரிஞ்சோ... தெரியாமலோ.... சங்கிலியன் சிலை...... சங்கிலியன் தோப்பு பக்கமே இவர்கள் போறதில்லையாம். எச்சரிக்கையின் நிமித்தம் இராஜினாமா கடிதங்கள் பறக்குதாம். நீதிமன்றங்கள் கூட.... நீதியை உணர்ந்து மூடப்பட்டிருக்கு பிள்ளையள். அப்ப.... சங்கிலியன் படை ஒரு முறை சொன்னால் கோடிமுறை சொன்னமாதிரி எண்டு.... என்ரை பேரப்பெடி சொன்னது சரிபோல கிடக்கு.

"எனது பதவியை இழந்தாலும் இழப்பேனே தவிர ஈழத் தமிழருக்காக உரிமைக் குரல் கொடுப்பதை நிறுத்தமாட்டேன்." சொன்னது யாரும் இல்லை... பாரதத்தின் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டோஸ். உறுதிக்கு இவரையும் உதாரணம் கூறலாம். பாவம் எங்கடை கொழும்பு க(ா)ட்சிகளும் இதைப் பார்த்து... வேண்டாம் அவர்கள் திருந்தும் பழக்கம் கிடையாது.

இன்னுமொரு சங்கதியையும் சொல்லுறன். தமிழகத்தில வை.கோ, ராமதாஸ், ஜெயலலிதா கூட்டணி வடக்கு கிழக்கிலிருந்து சிங்கள இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் எண்டு கேட்டு... வாஜ் பேய் அண்ணாவுக்கு... மகஜர் கொடுத்திருக்கினம்.. இதால அரசு தரப்பாரும் கோழிக்கள்ளர் போல முழிக்கினம்... அணுகுண்டால அசத்திப் போட்டு இருக்கிறவருக்கு... என்ன தீர்வைக் காட்டலாம் எண்டுதான் யோசனையாம்.

மற்றது பிள்ளையள் இங்கு அடிக்கடி மின்மாற்றிகள் பெரிய சத்தத்தோடு பியூஸ் போகுது. இருட்டுக்கை இருக்கிற மக்கள் சொல்லுகினம் இந்த மின்மாற்றியளை மாத்திறதிலும் பார்க்க.. மின்சார அமைச்சரை மாற்றினால்... எங்களுக்கு மட்டுமல்ல... இந்த நாட்டுக்கே வெளிச்சம் தெரியுமாம்.

கடல் பக்கத்தில் நல்ல கடும் புயல் அடிக்கும் போல கிடக்கு. கடல்ல.. தாவும் எங்கடை பிள்ளையளுக்கு ஏவும் கணைகளும், கூவும் செல்களும் கைக்கெட்டி இருக்கு எண்டு..... இரகசியமாகக் கதைக்கினம். தம்பியவை... இனி




யென்ன... ஏலோ.... ஏலோ.. அயிலசா.. ஏலேலோ... அயிலசா...

சொன்னாப்போல இந்தக் குண்டுதாரிகளையும், குண்டுகளையும் கண்டுபிடிக்க இரகசியப் பிரிவு நாயாய் அலைஞ்சும் முடியாதிருக்கல்லோ.... அதனால.... ஏகப்பட்ட மோப்ப நாய்கள் களத்தில் இறங்கப் போகுது. எல்லாம் ரெடியாம். அப்ப.... நான் நினைக்கிறன் இது சரிவந்தால்... இராணுவப் பற்றாக்குறையை சமாளிக்க ஒரு நாய்ப்படை உருவாக்கினாலும் உருவாக்குவார் ரத்வத்தை யார்.

வேறென்ன பிள்ளையள்.......

அடுத்தமுறை சந்திப்பம்.

# நூலும் நுகர்வும்

## திரைப்படங்கள் பற்றிய மூன்று நூல்கள்.




புலம்பெயர்ந்தோரிடையே திரைப்படங்களைத் தாயாரிக்கும் முயற்சிகள் கூடுதலாக பிரான்சில்தான் மேற்கொள்ளப்பட்டன. இதர நாடுகளிலும் ஆங்காங்கு ஒன்றிரண்டு முயற்சிகளைக் காணமுடிந்தது. இவர்களின் முயற்சிகளுக்கும்; வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வாறு தமிழில் சில நூல்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று மதன் கேப்ரியேல் எழுதிய திரைப்படம் தயாரிப்பது எப்படி என்ற நூல். இவர் சென்னை திரைப்படக் கல்லூரியில் பல வருடங்களாகக் கடமையாற்றி வருபவர். திரை, மேடை, தொலைக்காட்சி ஆகிய துறைகளில் தனக்குள்ள திறமையைப் பயன்படுத்தி, திரைக்கலை வளர்ச்சி, நுணுக்கம், படப்பிடிப்பு, நடைமுறைச் சிக்கல்களுக்கான தீர்வுகள் என திரைக்கலைத் தொழில் நுட்பத்திற்கு தமிழில் உருவாக்கியுள்ள முதல் நூலாகும். இந்திய திரைப்படக்கலையின் இன்றைய நிலையை நன்குணர்ந்து எழுதப்பட்ட நூல் என முகவுரை தருகிறார் திரைப்படக்கல்லூரி நடிப்புத்துறைத் தலைவர் சி.எம்.வி ரமணன்.

தமிழில் சிறுவர்களுக்கான திரைப்படங்கள் மிகமிகக் குறைவு. வந்தாலும் அவை பெரியோருக்குப் பாடம் கற்பிக்கும் ஞானக்குழந்தைகளின் கதைகளாகவே இருப்பதுண்டு. அதிலிருந்து வேறுபட்டு நிராகரிக்கப்பட்ட குழந்தைகள், ஒடுக்கப்பட்ட குழந்தைகள். எதிர்த்து நிற்கும் தீரமான குழந்தைகளின் கதைகளை உள்ளடக்கிய முக்கிய திரைப்படங்களின் கட்டுரைத் தொகுப்பே குழந்தைகளின் பிரபஞ்சம் என்ற நூலாகும். சமூகவிழிப்புணர்வு தன்னார்வக் கல்வி மையம் வெளியிட்டுள்ள இந்நூலை யமுனா ராஜேந்திரன் எழுதியிருக்கிறார்.

அடுத்த நூல் தம்பிஐயா தேவதாசின் இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை என்னும் நூலாகும். இலங்கைத் தமிழச் சினிமாவின் கதையை எதற்காகச் சொல்ல வேண்டும் என்ற கேள்விக்கு அந்நூலின் ஆசிரியர் விடைதரும்போது, "வேறு எந்த வரலாற்றுக்கும் இல்லாத சோகக்கதை எமது இலங்கைத் தமிழ் சினிமா வரலாற்றுக்கு இருக்கிறதே அதனால் சொல்ல வேண்டும்" என்கிறார். புலம்பெயர் தமிழச் சினிமாவிற்கும் இது பொருந்தும். சமுதாயம், தோட்டக்காரி, பாசநிலா, நிர்மலா, புதியகாற்றுத் தொடங்கி இதயராகம் வரை நடைபெற்ற நிகழ்வுகளை விளக்குகிறது. திரைப்படம் எடுப்போர் மட்டுமல்ல பார்ப்போரும் இவற்றைப் பயன்படுத்தி பார்க்கலாம்.

வெளியீடு:–
1– நர்மத்ா 2– சேவ்
3– காந்தளகம்– சென்னை.

## விமானத்தில் குடியிருப்பு!

ஆன் ஊஸ்றி என்பவர் அமெரிக்காவின் மிசுசிப்பிப் பகுதியில் வாழ்ந்து வருகிறார். இவருக்கு ஓர் புதிய ஆலோசனை தோன்றவே பறக்க முடியாத நிலையில் இருந்த போயிஸ் 727 இரக விமானமொன்றை விலைக்கு வாங்கினார். சுமார் 2000 டொலர் மலிவு விலையில் இதை வாங்கிவந்து, தனது தோட்டத்தில் வைத்துக்கொண்டார். 43 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்ட இந்த விமானத்தினுள்ளே அழகான நிலவிரிப்புக்களை விரித்தார். இருக்கைகள் அப்புறப்படுத்தி அழகான மண்டபமாக மாற்றினார். புதிய மின் விளக்குகள் பூட்டி, நீச்சல் தடாகத்துடன் அழகான வீடாக்வே உருவாக்கி விட்டார். சாதாரண வீடுகளின் விலையுடன் ஒப்பிட்டால் இது மிகமிக மலிவான வீடுதான்.



# தமது தனியுரிமையை இழக்கின்றன

ஆசிய, ஆபிரிக்க நாடுகளைப் பற்றி ஐரோப்பிய பத்திரிகையாளர்கள் எப்படி எழுதுகிறார்கள் என்பது இப்பொழுது உலகம் பூராவும் வெட்ட வெளிச்சமான உண்மையாகிவிட்டது. எலும்பும் தோலுமாக மெலிந்து வாடும் ஆபிரிக்கக் குழந்தைகள், அல்லது எங்காவது குண்டுகள் வெடித்தால் அந்தப் படங்களை விளம்பரப்படுத்தி தமக்குச் சாதக மானவர்களின் கருத்துக்கு வக்காளத்து வாங்குவது போன்றவையே இவர்களில் பெரும்பாலோரின் பணி. உலகின் தனியுரிமைச் சக்தி வாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்களும் அவற்றின் செய்தியாளர்களதும் கண்களினாலும் இனி உலகத்தைப் பார்க்கவேண்டிய



ஒரு காட்டிற்குள் சின்னஞ்சிறிய குடிசைக்குள் இருந்துகொண்டே உலகத்துடன் செய்திப் பரிமாற்றம் செய்ய உதவும் புதிய சற்லைற் தொழில்நுட்பம்

## இன்ரநெற்றில் பிரவேசிக்கும் மூன்றாம் உலக நாடுகள்

அவசியமில்லை. இவர்களின் தனியுரிமைச் சுவர்களை உடைத்துக் கொண்டு உண்மையான செய்திகள் உலகெங்கும் பரவத் தொடங்கிவிட்டன. இன்ரநெற்றின் வரவால் உலகத்தில் ஏற்பட்டுள்ள தகவல் புரட்சி மூன்றாம் உலக நாடுகள் பற்றி மேலைத்தேய நாடுகள் வளர்த்து வைத்திருக்கும் கருத்தியலை சுக்கு நூறாகச் சிதறச் செய்து கொண்டிருக்கின்றன.

இப்போது தகவல்கள் மறுக்கப்பட்ட சூழலில் வாழும் மூன்றாம் உலக நாடுகளின் மாணவரிடையே 'இன்ரநெற்' ஈடுபாடு மின்னல் வேகத்தில் வளர்ந்து வருகிறது. எப்படியாவது நாம் முன்னேறியே ஆக வேண்டும். அரசுகளால் வழங்கப்படும் இலவசப் பாடப் புத்தகங்களிலிருந்து உருவாக்கப்படும் அறிவு பூரணத்துவமானதல்ல என்ற உண்மை இப்போது இவர்களிடையே பெரும் தேடல் வெறியை உருவாக்கிவிட்டிருக்கிறது. இன்ரநெற்றில் இவர்கள் பெற்றிருக்கும் அசாதாரண திறமை ஐரோப்பிய நாட்டு மாணவர்களையும் ஆசிரியர்களையும் முதலில் அதிசயப்பட வைத்தது; இப்பொழுது பயப்பட வைக்கத் தொடங்கியுள்ளது.




உலகில் உள்ள கோடிக்கணக்கான மூன்றாம் உலக நாடுகளின் மாணவர்களுக்கு இன்ரநெற் மூலமே கல்வி கற்பிக்க முடியும் என்று கூறுகிறது '2B1 என்னும் நிறுவனம். தொலைபேசிகூட காணாத கிராமப்புற மாணவர்களிடையே இதை எப்படிச்சாத்தியமாக்குவது என்று கேட்கிறார்கள் சிலர். ஆனால் இந்த அமைப்பின் தலைவரான நிக்கலஸ் இதை முற்றாக மறுக்கிறார். சில முக்கியமான தகவல்

# அரசுகளின் தொடர்பு சாதனங்கள்!

மையங்களை ஏற்படுத்தி மாணவர்களை தயார்படுத்த முடியுமென்கிறார். இதற்கு நல்ல உதாரணம் இந்தியாவில் பெங்களூரில் இயங்கி வரும் கொம்பியூட்டர் நகரமாகும். இது இப்பொழுது உலகத்தின் கண்களைக் கவரத் தொடங்கியுள்ளது. இங்கு முதன்மையாகச் சித்தியடையும் மாணவர்களை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ஓடி வந்து பயன்படுத்தத் தயாராக உள்ளன. மலிவான விலையில் அபார வீச்சுடன் செயற்படும் ஆசிய ஆபிரிக்க மக்களின் கணணி மூளைகள் மேலை நாடுகளின் கவனத்தை திசை திருப்பியுள்ளன. இந்த நாடுகளின் பழைய ஏட்டுக்கல்விகளும், நூல் நிலையங்களும் அவர்களிடையே இப்படியொரு வீச்சை முன்னர் ஏன் உருவாக்கி வைத்திருக்கவில்லை என்று கேட்கிறார் நிக்கலஸ்.

இப்போதுள்ள சூழ் நிலையில் தகவல் புரட்சியை ஏற்படுத்துவதற்கு பெரும்பணம் தேவையென்று எவரும் பின்வாங்க முடியாது. எதியோப்பியாவில் பிறந்த நோவா சமாரா என்பவர் இதற்கு உதாரணமாகக் கூறக்கூடிய சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளார். இவர் மலிந்த விலையில் ஓர் சற்லைற் அலைவரிசையை விலைக்கு வாங்கி தற்போது 300 அலைவரிசையில் வானொலி நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறார். செய்தி, இசை, கல்வி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை பல இடங்களிலிருந்து பெற்று ஒலிபரப்புகிறார். ஏறத்தாழ ஆபிரிக்கப்பகுதியில் சுமார் 4.6 கோடி மக்கள் இந்தத் தனிமனிதருடைய ஒலிபரப்பைக் கேட்கிறார்கள். இதற்கான இவரின் ஒருநாளைய உற்பத்திச் செலவு சுமார் 1000 பிநெஞ்சு பிராங்குகள் மட்டுமே. அடர்ந்த காட்டுக்குள் உள்ள ஓர் குடிசையிலிருந்தே இதைச் சாதித்து விடலாம். எனவேதான் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்கள் முடக்கப்பட்ட தகவல்களையெல்லாம் கடந்து விடுவார்கள். அவர்களின் உண்மையான திறமைகள் உலகின் முன் தரிசனமாடும் காலம் அண்மித்துவிட்டதென்று அடித்துக் கூறுகிறது '2B1' என்னும் ஆய்வு நிறுவனம்.

ஆனால் ETU என்ற நிறுவனம் செய்த ஆய்வுகளின் படி இன்ரநெற்றின் பாவனை அமெரிக்காவிலேயே 95வீதம் காணப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளில் பணம் படைத்தவர்களிடமே இதற்கான வசதியுள்ளது. அதுவும் 0.0002 வீதமே பாவனையில் உள்ளது என்று தெரிவிக்கிறது. ஆனாலும் மூன்றாம் உலக நாடுகளில் இன்ரநெற் புரட்சியை ஏற்படுத்துவது கடினமான காரியமேயல்ல. முதலில் இன்ரநெற் தகவல்மையங்களை சிறுசிறு அளவில் ஆரம்பித்தாலே போதும். அது மின்னல் வேகத்தில் அங்கும் பரவிவிடும். மூன்றாம் உலக நாடுகளில் வறுமை, பற்றாக்குறை போன்றன இருப்பது உண்மைதான் இருப்பினும் எது இருந்தாலும் இன்ரநெற் மூலமாக அறிவியலைப் பெருக்குவது தவிர்க்க முடியாத காரியமாகும். இன்ரநெற் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் மிகப் பெரிய சாதனைகளை ஏற்படுத்தி வருகிறது. இது ஆசிய ஆபிரிக்க நாடுகளில்விஸ்தரிக்கப்படும்போதும் அதே சாதகநிலைதான் ஏற்படும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

உலகம் முழுவதும் ஓர் வர்த்தக மோசடி நிலவி வருகிறது. இன்ரநெற் மூலம் பொருட்களை விளம்பரம் செய்து பெரும் சந்தை வாய்ப்புக்களை மூன்றாம் உலக நாடுகளின் புதிய தலைமுறையினரே இனி ஏற்படுத்திவிடுவார்கள். உதாரணமாக நேபாளத்தின் மிகப் பெரிய உதாரணமாக நேபாளத்தின் மிகப் பெரிய ஏற்றுமதி நிலக்கம்பள விரிப்புக்கள். இவர்களுடைய 'டிசைன்' ஐரோப்பியர்களுக்கு விருப்பமாக இருக்கவில்லை. ஒவ்வொரு தனி மனிதரும் தனக்கு விரும்பிய 'டிசைனை' வரைந்து தொலைநகலி மூலம் அனுப்பும் முறை ஆரம்பித்ததும்


உலகின் மிக மலிவான கணணி நகரமான பெங்களூரில் இன்ரநெற்றை ஆர்வத்துடன் சூழ்ந்திருக்கும் மாணவர்கள்.



நேபாளத்தின் ஏற்றுமதி பெருகியது. ஐரோப்பாவில் அதன் சந்தை அரசுகளின் நிபந்தனைகளை உடைத்துக் கொண்டு பரவியது. எனவே தற்போது இன்ரனெற்றின் வருகை என்ன செய்யும். கொழும்புச் சந்தையை மட்டும் மையமாகக் கொண்டு சீரழியும் தமிழீழத்தின் உற்பத்திப் பொருட்கள் வர்த்தகத் தடைகளை உடைத்துக் கொண்டு உலக நாடுகளின் வியாபார மையங்களைத் தட்டமுடியும். டின்களில் அடைத்துவரும் பல தென்கிழக்காசிய நாட்டு உணவுப் பொருட்களின் சந்தையை தகர்த்து பெரும் பொருள் உழைக்கும் சக்தியுடையவர்களாக தமிழீழ விவசாயிகள் மாறும் காலமும் தூரத்தில் தெரிகிறது. IBM கணணியின் தலைவர் ஜேம்ஸ் வாட்சன் கூறும் போது, "எதிர்காலத்தில் ஐந்தே ஐந்து கணணிகள் போதுமானது முழு உலக வியாபாரத்தையும் நிர்மாணிக்க" என்றார். இதை இவர் 1943–ம் ஆண்டில் கூறியிருந்தார். இது நடைமுறைச் சாத்திய மாகும் நாள் நெருங்கிவிட்டது. இக்காரியம் நிறைவேறும்போது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனின் கனவும் நிறைவடைந்திருக்கும் எனலாம்.

யாழ். நூல் நிலையத்தைப் போல பல ஆயிரம் மடங்கு நூல் நிலயங்களின் தகவல்கள் இன்ரநெற்றிற்குள் அடக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டிற்குள் இன்ரநெற் வரும்போதே அந்த நூல்நிலையமும் வந்துவிடுகிறது. இந்த நூல் நிலையத்தை யாராலும் எரித்து விட முடியாது. எரிந்துபோன யாழ்" நூல்நிலையத்தைவிட மிகப் பெரும் பயன்தரும் இன்ரநெற் உலகம் மூன்றாம் உலக நாடுகளிற்கு தரும் விடிவை நாமும் பாவிக்கமுடியும்.

# கணிதத்திலும்



கடந்த ஆண்டு ரைம்ஸ் சஞ்சிகை உலகில் உள்ள மாணவரிடையே ஓர் கணிப்பை நடாத்தியது. இந்த ஆய்வின்படி கணிதம், விஞ்ஞானம், பௌதீகம் ஆகிய பாடங்களில் சிங்கப்பூர் மாணவர்களே உலகில் முதலிடம் வகிப்பதாக அறிவித்துள்ளனர். ஜனநாயகத் தன்மையற்ற, கண்டிப்புக்கூடிய வகுப்பறைக் கல்வி காரணமாகவே சிங்கப்பூர் மாணவர்கள் உலகில் முன்னணி இடம் வகிக்கிறார்கள் என்று ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஆசிரியர்கள் சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் இக் கருத்து சரியானதல்ல என்று மறுக்கிறார் சிங்கப்பூரின் பேராசிரியர் பெங் யீ லீ.

சிங்கப்பூரில் கற்பித்தல் எப்படி நடைபெறுகிறது என்பதை அறிய பலரும் ஆவல் கொண்டதால் பேராசிரியர் பெங் யீ லீ அண்மையில் டென்மார்க் வரவழைக்கப் பட்டிருந்தார். றொஸ்கில பாடசாலையில் சிங்கப்பூரின் கற்பித்தல் முறைகள் பற்றி செய்முறைப் பயிற்சியொன்றை நிகழ்த்திக் காட்டினார். பின் இவருடன் ரைம்ஸ் சஞ்சிகையின் ஆய்வு பற்றியும் சிங்கப் பூரின் கற்பித்தல் முறை பற்றியும் உரையாடப்பட்டது.

நீங்கள் கேள்விப்படுவது போல சிங்கப்பூரில் பாடசாலை மாணவர்கள் கண்டிப்பான வகுப்பறைக் கல்விக்குட்பட்டிருக்கவில்லை. ஆனால் கல்வி கற்பதன் மூலமே சிறந்த வாழ்வு கிடைக்கும் என்ற விடயத்தை அங்குள்ள மாணவர்கள் நன்கு விளங்கியுள்ளனர். இதற்கான கருத்தியலை மாணவரிடையே ஏற்படுத்தக்கூடிய நற்குடிமக்கள் என்னும் அறிவுரைக் கல்வியும் இங்கு நடைமுறைப்படுத் தப்படுகிறதென்றார். மேலும் கூறும் போது பிள்ளைகளை 6–வது வயதிலேயே பாடசாலைக்கு சேர்க்கிறோம். சேர்க்கும்போதே ஓர் நுழைவுப் பரீட்சை நடாத்தப்படுகிறது. இதில் மாணவர்கள் பெறும்



# விஞ்ஞானத்திலும் சிங்கப்பூர் மாணவர்களே உலகில் முதலிடம்



புள்ளிகளின் அடிப்படையில் அவர்கள் தரம் பிரிக்கப்படுகிறார்கள். இதற்கேற்பவே அவர்களின் பாடசாலை எதுவென்று தீர்மானிக்கப்படும். எனவே நாம் ஆறு வயதுள்ள சகல மாணவர்களையுமே ஒரே வகுப்பில் அனுமதிப்பதில்லை.



இதனால் எந்தப் பாடசாலையில் தரம்கூடிய மாணவர்கள் படிக்கிறார்கள் எவை முதல்நிலை, எவை இடைநிலையென பாடசாலைகளை வகுத்து மாணவர்களை அங்கு அனுப்புகிறோம். எனவே மாணவர்களை அவர்களின் தரத்திற்கேற்ப இலகுவாக நெறிப்படுத்தி விட முடிகிறது.

மாணவர்களை குழுக்களாக்கி கற்பிக்கும் வேலைத் திட்டம் அதிகமாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆசிரியர் கதிரையில் இருக்கும்போது மாணவர்கள் வட்டமாக நிலத்திலிருந்து அவர் உரையைக் கேட்கும் கற்பித்தல் முறையொன்றும் இங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. இங்கு சீனம், மலாய், தமிழ் என்பன தாய் மொழிக் கல்விகளாக இருந்துவருகின்றன. பெற்றோரும் ஆசிரியரும் எவ்வளவு தூரம் மாணவரிடம் அக்கறையுடையவர்களாக இருக்கிறார்களோ அதுபோலவே தமது உயர்விற்கு ஏணியாக இருப்பது ஆசிரியர்களே என்பதை உணர்ந்து மரியாதையுடன் நடக்கிறார்கள் என்கிறார்.

இங்கு 6–12 வயதுவரை முதல் நிலைப் பாடசாலைகள். அடுத்த நான்கு ஆண்டுகள் இரண்டாவது நிலை. காலை 7.30 தொடக்கம் 13.00 மணி வரை ஒரு பிரிவு வகுப்புகளும் 13.00 தொடக்கம் 18.30 மணி வரை அடுத்த பிரிவும் நடாத்தப்படுகிறது. எனினும் ஐரோப்பிய வகுப்பறை நிலையை அவதானித்த லீ கூறும்போது இத்தகைய வசதி சிங்கப்பூர் சூழலில் இல்லாமையால் நாம் எமக்கேற்ற வழிமுறையையே கடைப்பிடிக்கிறோம். இங்குள்ள வசதிகள் அங்கும் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் நமது கற்பித்தல் முறையிலும் பல மாற்றங்கள் செய்ய வேண்டி வரும். நாம் எவ்வளவு தான் சிறந்த மாணவரெனக் கூறினாலும் உயர்கல்விக்காக மேற்கு நாடுகளுக்கே நமது மாணவர்கள் வருவது இதன்பொருட்டே எனினும் இதுபற்றி நமக்கு மனச்சங்கடம் இல்லாமலும் இல்லை என்றார். மேலும் ஜப்பானிலும், கொரியாவிலும் நீங்கள் கூறும் கடுமையான வகுப்பறைக் கல்வி உள்ளது. அது மாணவர்களுக்கு களைப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளதை மறுப்பதற்கில்லை என்றார். எனினும் சிங்கப்பூரில் பட்டதாரிப் படிப்பை முடித்துவிட்டே அதிகமானோர் வேலைக்கு வருகிறார்கள் என்றும் கூறினார்.

ரைம்ஸ் சஞ்சிகை





# கேட்டோம் சொன்னார்கள்

புலம் பெயர்ந்து சுவிற்சர்லாந்து நாட்டில் வசித்து வந்தாலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ஓவியங்களை மிகவும் நுட்பமான முறையில் வரைந்து தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற திரு.சுபாஸ்சந்திரபோஸ் அவர்களுடன்.....

**கேள்வி: முதலில் நீங்கள் உங்களைப்பற்றி பாலம் வாசகர் களுக்கு கூறமுடியுமா?**

**பதில்:** தமிழீழத்தின் அளவெட்டி என்னும் கிராமத்தில் பிறந்தேன். இலங்கைத் தீவின் அப்போதைய பாடத் திட்டத்திற்கமைய 8–ம் வகுப்பு வரையும் தொடர்ச்சியாக ஓவியத்தைப் பாடங்களில் ஒன்றா கப் பயின்றேன். பின்னர் ஏற்பட்ட பாடத் திட்ட மாற்றத்திற்கமைய விஞ்ஞானப் பாடத்திற்கு மாறி னேன். இருந்தும் தொடர்ச்சியாக என்னுள் கனன்றுகொண்டிருந்த ஓவியத்தின் மீதான ஈடுபாடு, பாட சாலையில் ஓவியத்தை ஒரு பாட மாகக் கற்காவிடினும், அத்துறை யிலேயே மென்மேலும் மெருகூற் றிச் செல்ல வேண்டுமென்ற வெறி யாக மாறியது. இருந்தும் அப் போதைய க.பொ.த. சாதாரண பரீட்சையில் ஓவியத்தை ஒரு பாட மாக எடுத்து, பரீட்சை எழுதி திறமைச் சித்தியெய்தேன். இது எனக்குள் பேருந்துதலைத் தந்தது. அந்தக் காலகட்டத்தில் எங்கள் சராசரி யாழ்ப்பாண மனநிலை ஒரு குழந்தையை எஞ்சினிய ராகவோ, டொக்டராகவோ உரு வாக்கிப்படுத்திப் பார்க்குமேயன்றி ஒரு ஓவியனாக அவனை வளர ஊக்குவிக்காது. இந் நிலையே எனக்கும் எனது குடும்பத்தில் இருந்தது. இருந்தும் எனது ஆர் வம் என்னை ஓவியத் துறை யிலேயே தள்ளிக்கொண்டிருந்த தால்– இன்னும் இருப்பதால் நான் இத்துறையில் ஓரளவேனும் பிர காசிக்க முடிந்துள்ளது.

**கேள்வி: ஓவியத் துறையில் தங்களது அனுபவங்கள் பற்றி சொல்லமுடியுமா?**



## ஓவியர் சுபாஸ் சந்திரபோஸ்

**பதில்:** சிறுபராயத்திலேயே தெருவில் தூரிகையுடன் விளம் பரங்கள் எழுதச் செல்வோரே முதலில் என்னைக் கவர்ந்தவர் கள். தெருக்களில் அவர்கள் தீட் டும் ஓவியப் பலகைகளை மணித் தியாலக் கணக்கில் நின்று அவ தானித்துக்கொண்டிருப்பேன். முக்கியமான வேலைகள் பல இதனால் தடைப்பட்டதும் உண்டு. பின்னர் எனது கண்களுக்குப்படும் உருவங்களை அவ்வாறே கடதாசி யில் கொண்டுவர வேண்டுமென்று முயன்றேன். இம் முயற்சி வெற்றி யளிக்கவே சிக்கலான உருவங்க ளையும் பல வர்ணங்களைக் கொண்டவைகளையும் ஓவியமா கத் தீட்டினேன். இவை எனது ஓவியத் துறையில் மைல் கற்க ளானவை.

பின்னர் எனக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால்







80–களில் கொழும்புக்கு இடம்பெயர்ந்து அங்கு முதலில் அச்சுத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினேன். இங்குதான் Litho-Graphic—ஐப் பயின்றேன். பின்னர் வர்த்தக ரீதியான கார்ட்டூன்ஸ், மற்றும் விளம்பரப் படங்கள் என்பவற்றை வரைந்து கொழும்பில் நிலையான ஒரு தொழிலில் அமர்ந்தேன். எனது குடும்பத்தின் மேலே எனக்கிருந்த அளப்பரிய பொறுப்பு கொழும்பிலிருந்து என்னை வெளிநாட்டிற்கு இடம்பெயர வைத்தது. வெளிநாடுகளில் தொழில் ரீதியாக நான் ஓவியத்துறையில் ஈடுபட்டதே எனது வாழ்க்கையில் மறக்கமுடியாததும் மிகுந்த அனுபவத்தைப் பெற்றுத் தந்ததுமான காலகட்டங்களாகும். ஓவியத்திற்கு வெளிநாட்டவர் கொடுக்கும் மரியாதையும், அதன் பெறுமதியும் எம்மால் உற்று நோக்கப்படவேண்டியது.

பின்னர் நான் சுவிஸ் நாட்டிற்கு வந்தபின்னர் எமது தேசத்தின் விடுதலைக்காக என்னாலான ஒரு சிறு பங்களிப்பை இந்த ஓவியங்களினூடாக ஆற்றக்கூடியதாகவுள்ளது. எமது சனங்களின் சொல்லொணாத்துயர், எமது விடுதலைப் போர் எனது மனதில் ஏற்படுத்தும் உணர்வுகளை நான் ஓவியமாக வடித்துக்கொண்டிருக்கிறேன். இவை நாட்காட்டிகள், CDகள், பிரசுரங்கள் என சுவிஸ் ஐரோப்பிய நாடுகளில் வெளிவந்துள்ளன.

**கேள்வி: தங்களது ஓவியங்களுக்கு யாரையாவது முன்மாதிரியாகக் கருதுகிறீர்களா?**

**பதில்:** இல்லை. ஒவ்வொரு காலப் பகுதியிலும் என்னைப் பாதித்த விடயங்களை நான் பதிவுசெய்து கொண்டு வந்திருக்கிறேன். இவை சுயமான தேடலாகவே இருந்துவந்துள்ளன.

**கேள்வி: கோட்டு ஓவியம், தைலவர்ண ஓவியம், நவீன ஓவியம், மரபு ரீதியான ஓவியங்களென ஓவியங்களில் பல வகைகள் உண்டு. நீங்கள் கூடுதலாக எத்தகைய ஓவியங்களில் ஈடுபாடு காட்டுகிறீர்கள்?**





**பதில்:** இவையும் ஒரு படிமுறை வளர்ச்சியாக வந்துள்ளது. இவற்றில் அனைத்து வகை ஓவியங்களையும் நான் வரைந்துள்ளேன். இருந்தும் தைலவர்ண ஓவியமானது கடினமானதும், நிரந்தரமானதுமாகும். அவசியமான வெளியீடுகளெனக் கருதுபவைக்கே நான் தைலவர்ண ஓவியத்தைப் பயன்படுத்துவேன்.

• கோட்டு ஓவியத்தை மரபு–நவீன ஓவியங்கள் இரண்டிலும் பயன்படுத்தியுள்ளேன். ஆரம்பத்தில் மரபு ரீதியான ஓவியத்தில் அதிக ஈடுபாடு காட்டிய நான் படிப்படியாக அவற்றில் நவீனத்தைப் புகுத்தி புதிய தேடலை ஆரம்பித்துள்ளேன். மரபு ஓவியங்களில் காட்டமுடியாத பல்வேறு வகை உணர்வுகளை, ஓவிய யுத்திகளைப் பயன்படுத்தி நவீன ஓவியத்தில் காட்ட முயல்கிறேன். இவ் வகைத் தேடல் என்னிடம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**கேள்வி: தங்களது ஓவியங்கள் கண்காட்சிகளில் இடம்பெற்றுள்ளனவா?**

**பதில்:** சுவிஸிலுள்ள பாசல் நகரில் நடைபெற்ற 34 நாடுகளைச் சேர்ந்த ஓவியர்களின்

கண்காட்சியில் எனது படங்களும் இடம்பெற்றன. பெரும்பாலான பார்வையாளர்களிற்கிடையிலான கருத்துக் கணிப்பில் எனது படங்கள் முதல் இடத்தைப் பெற்றதாக அறியத் தந்தனர். இதைவிட சுவிஸின் பல மாநிலங்களில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பல்வேறு உப அமைப்புக்களால் எனது படங்களின் கண்காட்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

**கேள்வி: தமிழீழத்தின் இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பணியாற்றும் ஓவியர்களின் படைப்புக்கள் பற்றிய தங்களது அவதானிப்புகள் என்ன?**

**பதில்:** தமிழீழத்திலிருந்து வரும் படைப்புக்களில் நம்பிக்கையூட்டக்கூடிய வளர்ந்துவரும் கலைஞர்களின் படைப்புக்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. போரின் தாக்கம் அக் கலைஞர்களின் இதய உணர்வில் ஏற்படுத்திய பாதிப்புக்களை நான் அந்த ஓவியங்களில் காண்கிறேன். அவ்வாறானவர்களுக்கு மென்மேலும் ஊக்கம் கொடுத்து வளர்த்தெடுக்க வேண்டியது எமது கடமை. குறிப்பாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் இதில் பாரிய பங்களிப்பைச் செய்யலாம். பொருளாதார ரீதியாக சிக்கலுக்குள்ளிருக்கும் இவ்வாறான எமது தமிழீழ ஓவியர்களுக்கு நாம் உதவுவது எமது கடமையாகும்.

**கேள்வி: ஓவியத்துறையில் தாங்கள் எதிர்பார்க்கும் இலக்குகள் யாவை? தங்களது ஓவியங்களை சீ.டி ஆகத் தயாரிக்கும் எண்ணமுண்டா? அதற்கு பாலம் போன்ற சஞ்சிகைகளிடமிருந்தும் ஆர்வலரிடமிருந்தும் தங்களது எதிர்பார்ப்பு யாது?**

**பதில்:** தற்போதைய எமது தேசத்தின் நிலையில், அதன் விடுதலைக்கான எனது பங்களிப்பை ஓவியத்தினூடாகச் செய்வதே எனது தற்போதைய நோக்கமாகும். இருந்தும் ஒரு முழு ஓவியனாக என்னை வளர்த்தெடுக்கும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருப்பேன். எனது படைப்புக்களை சி.டி–யில் கொண்டுவரும் ஆர்வம் எனக்கு உண்டு. அதன் ஆரம்ப கட்ட வேலைகளை எனது நண்பர்கள் தொடங்கவுள்ளார்கள். பாலம் போன்ற சஞ்சிகைகள், ஆர்வலர்கள் இதற்குத் தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்குவார்கள் என்றே எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி: தங்களது ஓவியங்களை இணைத்து சி.டி–க்கள் சில அட்டைப் படங்கள் நாட்காட்டிகள் போன்றன காணக்கிடைக்கின்றன. ஆனால் புலம் பெயர்ந்தோர் படைப்புக்களான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தங்கள் ஓவியங்கள் அதிகமாக இடம் பெறுவது குறைவாகவே உள்ளது. காரணம் யாது?**

**பதில்:** எதிர்காலத்தில் புலம்பெயர் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இதை நிவர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

**கேள்வி: தங்களுக்குப் பிடித்த ஓவியர் யார் என்று சொல்ல முடியுமா?**

தமிழீழத்தின் ஓவியர் ரமணி. கோட்டுச் சித்திர முறையில் அதி திறமை கொண்டவர்.



இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியாவில் கூட இவருக்கு ஒப்பான கோட்டுச் சித்திர ஓவியர் இல்லை என்று எனது நண்பர் ஒருவர் கூறியபோது பெருமையாக இருந்தது.



இதைவிட பிக்காஸோவின் ஓவியங்கள் என்னைப் பிரமிக்க வைத்தன. மனித நேயத்தின் சாட்சியான குவார்னிகா அந்தக் கலைஞனின் மென்மையான இதயத்தைப் படம்பிடித்து நிற்கிறது.

**கேள்வி:** சஞ்சிகைகள் உருவாக்கத்தில் ஓவியர்களின் பங்கு இனி எத்தகையதாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** ஒரு சஞ்சிகையின் அமைப்பு மற்றும் அதன் குரல், ஓவியத்திற்கூடாக புது மெருகை அடைகிறது. மேற்கத்திய சஞ்சிகைகளை உற்றுநோக்கினால் கார்ட்டூன்ஸ், மற்றும் நவீன ஓவியங்களூடாக தமது செய்தி, கட்டுரை மற்றும் விளம்பரங்களை புது மெருகேற்றியிருப்பார்கள். இம்முறை தமிழ்ச் சஞ்சிகைகளில் கைக்கொள்ளப்படாதது வருந்தத்தக்கது.

எனது படைப்புக்களை நோக்கி அதற்குரிய மரியாதை கொடுத்து என்னை நேர்காணல் செய்த பாலம் சஞ்சிகைக்கு எனது நன்றிகள்.

# வாசன் அச்சகம்




**Wedding Cards, Letter Heads, Business cards, Leaflets, Receipt pads, Restaurants Menus, Invoice, etc...........**

**நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் ......**

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வடிவத்தில் தரமாகவும், விரைவாகவும், மலிவாகவும் குறித்த நேரத்தில் பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்.

# சிறுகதை

எழுத்தாளர் சண்முகம் மிகவும் திருப்தி நிறைந்தவராய் சோபாவில் அமர்ந்திருந்தார். சொல்ல எண்ணியதை சொல்ல வேண்டிய முறையில் சொல்லி விட்ட திருப்தி. கடந்த பதினைந்து வருட டென்மார்க் வாழ்வில், பல தடவைகள் அவர் அனுபவிக்க நேர்ந்த உதாசீனம், ஒதுக்கல், இகழ்ச்சி, வெறுப்பு யாவுமே கலந்து கசப்பாய்க் கசடுதட்டிக் கிடந்த இதயத்தில் இப்போ இலேசானதொரு சுகம்.

அவர் அன்று நிகழ்த்திய உரை கூட்டத்துக்கு வந்திருந்த டெனிஷ்காரரின் மனங்களைத் தொட்டிருக்கத்தான் வேண்டும். அதில் சந்தேகமே இல்லை. இல்லையானால், பேச்சு முடிந்ததும் ஏன் அந்த நிசப்தம்? அதன்பின் ஒன்றாய் இரண்டாய்த் தொடங்கிய கைதட்டல், பின் மண்டபம் முழுவதுமே அதிரும் வகையில் ஒலிக்கவேண்டும்! 'சும்மாவா பின்னே' அவர்கள் வழிபடும் இயேசுவின் வாழ்க்கையில் இருந்தல்லவா மேற்கோள் காட்டினேன்! அதுதான் எனது பேச்சு அவர்களுடைய மனங்களை உலுப்பிவிட்டது!' மனசுக்குள் தன்னையே பாராட்டிக்கொண்டார் சண்முகம்.

"இவள் குற்றமிழைத்தவள் எனக் கையும் களவுமாகப் பிடிபட்டவள்தான். இவள் கல்லெறிந்து கொல்லப்படவேண்டியவள் என உங்களுடைய மதம் கூறுகின்றது..... சரி...... ஆனால், உங்களில் குற்றமில்லாத ஒருவன் இவள்மீது முதலாவது கல்லை எறியட்டும்! என்று சொன்னார் இயேசு. ஆவேசத்தோடு கற்களை கையில் எடுத்துக் கொண்ட கூட்டம் திகைத்துப் போய் நிற்கின்றது. பின் தலை குனிகின்றது. ஒவ்வொருவராக, கையிலெடுத்த கற்கள் நழுவி விழுகின்றன. கடைசியில் அங்கு எவருமே இல்லை! இயேசுவையும் அவளையும் தவிர! கண்களில் நீர்பெருக அவள் இயேசுவின் பாதங்களில் வீழ்கின்றாள். மகளே நல்லவளாக இரு என்கின்றார் இயேசு.....

"எனக்கு இனத்துவேஷத்தையிட்டுக் கண்டித்துப் பேச எந்த யோக்கியதையும் இல்லை. அதாவது எவர் மீதும் முதற்கல்லை எறிவதற்கான தகுதி எனக்கில்லை! ஏன் இரண்டாவதாக அல்லது மூன்றாவதாக கல்லை எறிவதற்குக்கூட நான் அருகதை அற்றனவன்! ஏனெனில், எமது நாட்டில் எமது மக்களின் ஒருசாரரைத் தாழ்த்தி நடத்திய ஒரு சமூகத்தைச் சேர்ந்தவன் நான். தமிழ்ப்பண்பாடு, கலாச்சாரம், மனிதாபிமானம் என்றெல்லாம் ஒருபுறம் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும், மறுபக்கம் அதே சமயம் எம் மக்களில் ஒரு பகுதியினரை ஒதுக்கியும், பாகுபாடு காட்டியும் வாழ்ந்த ஒரு சமூகத்தின் அங்கத்தினன் நான்! எனத் தொடர்ந்து, தனது சமூகம் வாழ்ந்த இரட்டை வாழ்வு வரலாற்றுக்கு, இரண்டொரு உருக்கமான உதாரணங்களையும் சொல்லி, அப்படிப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவன், எப்படி இங்கு டெனிஷ் மக்கள் அன்னியரைப் புறக்கணித்தும் வெறுத்தும் துவேஷங் காட்டியும் நடத்துகின்றனர் எனக் குறைகூற முடியும்? என்ற வகையில் சண்முத்தார் தனது பேச்சை நிகழ்த்தியிருந்தார்.



ஐரோப்பா முழுவதுமே வெளிநாட்டவர்க்கு எதிராக வளரும் இனத்துவேஷத்தைக் கண்டிக்கும் வகையில் ஒரு டெனிஷ் தோழமைச் சங்கம் நடத்திய அந்தக் கூட்டத்திற்கு வெளிநாட்டு கவிஞர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தனர். சண்முகமும் மூத்த பரம்பரை தமிழ் எழுத்தாளர் என்ற ரீதியில், டென்மார்க் அகதிகள் சங்கமூலம் பரவலாக அறியப்பட்டிருந்ததனால்,

அக்கூட்டத்தில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். அவருடைய இருப்பிடம் தொலைவில் இருந்ததனால், இரவை வசந்தன் என்ற இளைஞன் வீட்டில் கழிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வசந்தனை, எழுத்தாளர் சண்முகத்துக்கு முன்பின் தெரியாது. கூட்டம் முடிந்ததும் அவரைத் தனது இருப்பிடத்துக்கு அழைத்து வந்த வசந்தன், அவரை வரவேற்பறையில் உட்காரவைத்துவிட்டு இரவு உணவை மேசைக்கு எடுத்துக் கொண்டிருந்தான். அவன் இதுவரை அதிகம் பேசவில்லை அமைதியாவன் பண்பான இளைஞன் எனத் தனக்குள் கணித்துக் கொண்டார் சண்முகத்தார்.

உணவருந்தும்போதும் அவரை அவன் அன்புடன் உபசரித்தானே அல்லாது அதிகமாக எதுவும் பேசவில்லை. அவன் தனது பேச்சையிட்டு ஏதாவது சொல்லமாட்டானா என எதிர்பார்த்த சண்முகத்தார், அதற்குமேலும் பொறுக்க முடியாமல் "தம்பி வசந்தன்...... என்னுடைய பேச்சு எப்பிடி?" எனக் கேட்டார்.

வசந்தன் அதற்கு உடனேயே பதிலளிக்காமல், அவன் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவனுடைய விழிகள் தன்னை ஊடுருவுவதுபோல் சண்முகத்தாருக்குத் தோன்றியது.

"மன்னிக்கவேண்டும் ஐயா!.... உங்களுடைய பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை!" அகம்பாவமோ, அலட்சியமோ சிறிதும் இல்லாத பதில். அமைதியாக, ஆனால் ஆணித்தரமாகச் சொல்லப்பட்ட பதில். சண்முகத்தாருக்கு முகத்தில் அறைந்ததுபோலிருந்தது. இருப்பினும் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, "ஏன் தம்பி அப்பிடிச் சொல்லுறீர்?" என புன்சிரிப்புடன் கேட்டார்.

"எந்த வகையில் பேசினால் டெனிஷ் மக்களுக்குப் பிடிக்கும் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, அவர்கள் மனம் நோகாமல் உங்களுடைய பேச்சை நிகழ்த்தினீர்கள். உண்மைகளை ஒதுக்கிவிட்டு, அகதிகள் வெளிநாட்டோர் என்போர் எவ்வாறு டென்மார்க்கில் வாழவேண்டும், பழகவேண்டும் என அவர்கள் உள்மனதில் விரும்புகிறார்களோ, அந்த விருப்பத்துடன் முரண்படாமல் இருக்கும் வகையில் உங்களுடைய பேச்சை அமைத்துக் கொண்டீர்கள். இது சமயோசிதமானது, சாமர்த்தியமானது என நீங்கள் நினைக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இது வெறும் சந்தர்ப்பவாதம், நசிந்துகொடுக்கும் தன்மை என்றுதான் சொல்வேன். அதுதான் உங்களுடைய பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை என்றேன். அகதிகளுக்கும் வெளிநாட்டவர்க்கும் எதிராக நிகழ்த்தப்படும் நாகரீகமற்ற செயல்களை விளக்கமாக எடுத்துக் கூறி அவற்றை ஒழிக்க டெனிஷ் மக்கள் செய்யவேண்டியவை எவை எனப் பேசியிருக்கவேண்டிய நீங்கள், அதைவிட்டு, இனத்துவேஷத்தைக் கண்டிக்க உங்களுக்கு உரிமையில்லை, ஏனெனில், நீங்களும் நாட்டில் இதேபோன்று பாரபட்சமாகத்தான் நடந்துகொண்டீர்கள் என்று டெனிஷ் மக்களுக்கு கூறுவது வெறும் பம்மாத்து என்று நான் நினைக்கிறேன்!"

"தம்பி! என்னுடைய பேச்சின் உள்நோக்கத்தையிட்டு நீர் எதையும் கூறலாம். அது உம்முடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதில் தலையிட எனக்கு உரிமையில்லை. ஆனால், நான் பேசிய பேச்சு ஒரு டெனிஷ்காரனுடைய மனதில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதுதான் இங்கே நாம் முக்கியமாகக் கருத்துக்கு எடுக்கவேண்டிய விஷயம்! குற்றம் சாட்டுகிறவன் என்ற நிலையிலிருந்து பேசாமல், நாம் எல்லோருமே குற்றவாளிகள்தான் என்றொரு உணர்வை எனது பேச்சு அவர்களில் ஏற்படுத்துகையில், அவர்களில் ஒருசிலராவது உண்மையை உணர்வார்களல்லவா? முதற்கல்லை எறியும் தகுதி தமக்கில்லையென அந்த ஒருசிலராவது ஒரு கணம் சிந்தித்தாலே போதும்!.... அச் சிந்தனை, நிச்சயமாக அவர்களுடைய எதிர்காலச் செயல்களையும், அவர்கள் பழகும் சூழலையும் பாதிக்கும்! இயேசுவின் மார்க்கத்தைப் பின்பற்றும் இவர்கள், அவருடைய உதாரணத்தை நிச்சயம் உதாசீனம் செய்யமாட்டார்கள்!. டெனிஷ்மக்களில் பெரும்பான்மையினர் நல்லவர்கள் தம்பி!" எனச் சண்முகத்தார் சொன்னபோது பட்டெனப் பதிலளித்தான் வசந்தன்.


## உலகின் மிகச் சிறிய வானொலிப்பெட்டி



இங்கே நீங்கள் காணும் வானொலிப் பெட்டியின் பெயர் "வாழ்க்கைக்கு அவசியம்" என்பதாகும். இதுவே உலகின் மிகமிகச் சிறிய றேடியோவாகும். இதன் நீளம் நான்கு செ.மீ. அகலம் ஒரு செ.மீ. இரண்டு சிறிய 1,5 வோல்ற் பற்றரிகளில் இயங்குகிறது. அமெரிக்காவின் "Poway" நிறுவனம் இதைத் தயாரித்திருக்கிறது. விலை 30 அமெரிக்க டொலர்களாகும். ஐரோப்பிய நாடுகளில் விற்பனைக்கு வரத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சிறிய வானொலிப் பெட்டிகள் FM அலைவரிசையில் இயங்கும். இதை காதிலேயே கொழுவிக் கொள்ளலாம். ஐரோப்பியத் தமிழ் ஒலிபரப்புச் சேவைகளை இனி பொக்கற்றுக்களில் வைத்தபடியே கேடகலாம் என யோசிக்கிறீர்களா?

"இனத்துவேஷம் குற்றமா இல்லையா என்பதுதான் நாம் இங்கு கவனிக்கவேண்டிய விஷயம்! யார் குற்றம்சாட்டத் தகுதியுள்ளவர்கள் என்பது அல்லவே! உண்மையை எவரும், எங்கேயும் எப்போதும் சொல்லமுடியும்! சொல்லவும் வேண்டும்! என்பதுதான் எனது கருத்து! மேலும், டெனிஷ்காரரில் பெரும்பான்மையினர் பரந்த மனப்பான்மை கொண்டவர்கள் என நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது உங்களுக்கு நாட்டு நடப்புத் தெரியவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது! வெள்ளையர்களாகிய தாங்கள், எல்லோரையும் விட உயர்ந்தவர்கள் என்றதொரு எண்ணம் இவர்களுடைய அடிமனங்களில் இருக்கத்தான் செய்கின்றது!


இதற்கு இயேசுவின் வாழ்க்கையில் இருந்தே என்னால் ஒரு உதாரணத்தைக் காட்டமுடியும்.... இஸ்ரவேலர்களே இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம், அவர்களை மீட்கவே இயேசு உலகில் அவதரித்தார் என்றதொரு எண்ணம் யூதர்கள் மத்தியில் இருந்தது உண்மை. புறஜாதியைச் சேர்ந்த பெண்ணொருத்தி இயேசுவின் கிருபையை நாடிவந்தபோது, அவர் 'உண்மைதான் ஆண்டவரே!.... ஆனால், பிள்ளைகளின் மேசையிலிருந்து கீழே விழும் அப்பத் துணிக்கைகளை நாய்க்குட்டிகள் தின்னுமே! என்கின்றாள். இங்கும், இன்று நாம் மேசையிலிருந்து கீழே விழும் துணிக்கைகளைப் பொறுக்கித் தின்னும் நாய்க்குட்டிகளைப் போலத்தான். அடங்கியொடுங்கி, போட்டதைத் தின்றுவிட்டுவாலை ஆட்டவேண்டும்! அகதிகளும் புறஜாதியினரும் அதற்குமேல் எதற்கும் பாத்தியதை இல்லாதவர் என்ற ஆதிக்க உணர்வுதான் பெரும்பான்மையான டெனிஷ் மக்களின் அடிமனதில் உள்ள எண்ணம்! வெளிநாட்டவர்க்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட கட்சிகளுக்கு இங்குமட்டுமல்ல, ஐரோப்பா முழுவதுமே ஆதரவு வளர்ந்துகொண்டு வருவது உங்களுக்குத் தெரியாதா?"



"தெரியும் தம்பி!..... தெரியும்!... ஆனால் இதை யோசிச்சுப் பாரும்! என்னத்தைச் சொன்னாலும், நாங்கள் இந்த நாட்டுக்குப் பஞ்சம் பிழைக்க வந்தனாங்கள்...... இந்த நாட்டுச் சனங்களின்ரை தயவிலைதான் நாங்கள் இருக்கிறம், இருக்க முடியும்! அவங்களை நேருக்குநேர் பகைச்சுக்கொண்டு நாங்கள் எப்படி இருப்பது?..... அவர்களுடைய வாழ்க்கையை நாங்களே பாழடிக்கலாமா? எனக் கேட்ட சண்முகத்தாரைப் பார்த்துச் சிரித்தான் வசந்தன். அச் சிரிப்பில் அவருடைய நிலைகண்டு பரிதாபப்படும் தொனியே தெரிந்தது.

"ஐயா! இன்னும் இரண்டு வருசத்தில இருபத்தியோராம் நூற்றாண்டு வரப்போகுது! நீங்கள் இன்னமும் உங்கடை பழைய காலத்திலைதான் இருக்கிறியள்! இந்தக் கோழைத்தனமும், அடிமை மனப்பான்மையும், நசியல் குணமுந்தான் எங்களை இந்த அகதி நிலைக்குக் கொண்டு வந்திருக்குது! ஒரு மனிதனுக்கு, அவன் எங்குதான் வாழ்ந்தாலும், அவனுக்கெனச் சில அடிப்படை உரிமைகள் உண்டு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம்! வெறும் சலுகை போதும் எனத் திருப்திப்பட்டு அடங்கியொடுங்கி வாழ்வதில் எனக்குச் சம்மதமில்லை! நாய்க்குட்டிகள் போல, அவர்கள் போட்டதைத் தின்றுவிட்டு வாலை ஆட்டிக்கொண்டு இங்கு வாழ்ந்தாலுங்கூட, எமது இளைய பரம்பரையினரை இங்கு நிம்மதியாக வாழ விடுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை! தங்களுக்குக் கிடைக்கவேண்டியவற்றில் நாங்கள் பங்குகொள்ள வந்துவிட்டோம் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். பிள்ளைகளுடைய அப்பங்கள் பிள்ளைகளுக்கே சொந்தம் என்பதுதான் அவர்க

## மிகப்பெரிய சோபா





இதுவரை உலகின் மிக நீளமான சோபாவாக கின்னஸ் சாதனையில் பதியப்பட்டிருந்தது 10 மீற்றர் நீளமான சோபாவே. ஆனால் தற்போது இங்கே நீங்கள் காண்பது 'Express Furniture' என்ற நிறுவனம் தயாரித்துள்ள சோபாவாகும். 15 மீட்டர் நீளமான இந்தச் சோபாவில் 30 பேர் இருக்கலாம். 12 பெரிய மனிதர்கள் தாராளமாகவே படுத்துத் தூங்கலாம்.

நிறுவனத்தின் தலைவரான டேவிட் எட்வேட்டும் மேலும் எட்டு உதவியாளர்களும் இணைந்து 14 நாட்களில் செய்து முடித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மெத்தையாக இருந்து சென்றால் ஒரு தொங்கலில் இருந்து மறு தொங்கல் போய்ச்சேர பல நிமிடங்கள் ஆகும்.

ளது கொள்கை! வெளிநாட்டவர்களும், அகதிகளும் எவ்வளவுதான் சமரசம் செய்துகொண்டு இங்கு வாழமுயன்றாலும், அவர்கள் இங்கு சம அந்தஸ்துப் பெற்றவர்களாக வாழமுடியாது! நாளுக்கு நாள் வளரும் இனவெறியும், துவேஷமும் அவர்களை விரைவில் இந்த நாடுகளைவிட்டு உதைத்து விரட்டத்தான் போகின்றன! அது விரைவில் நடக்கவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்! ஏன் தெரியுமா?.... அப்போதுதான் தனக்கொரு சொந்த நாடு வேண்டும் என்ற உண்மையை எம்மவர்கள் உணர்வார்கள்! என்ற வசந்தனுடைய குரலில் இப்போது சிறிது சூடு ஏறியிருந்தது.

எழுத்தாளர் சண்முகத்தினால் எதுவும் சொல்ல முடியவில்லை. வசந்தன் கூறியதில் உள்ள உண்மை அவருக்கு மிகத் தெளிவாகப் புலப்பட்டது. அநியாயம் நிகழும்போது அதை, எதிர்த்து நிற்கத் தைரியமில்லாமல், வளைந்து கொடுத்தும், நசிந்து கொடுத்தும், தனது இருத்தலைக் காப்பாற்றிக் கொள்வதையே வாழ்க்கையாக்கிக் கொண்ட தன்னையும், வசந்தனையும், அவரால் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

சற்றுநேரம் அமைதியாக இருந்தவர் பின்னர், "தம்பி!.... இந்த நாட்டிலை, எங்களிலை உண்மையான அன்பும், அக்கறையும், மனிதாபிமானமும் உள்ள எத்தனையோ டெனிஷ்காரர் இருக்கினம்தானே!.. இல்லையெண்டு சொல்லுறீரோ?" என அடங்கிய குரலில் கேட்டார்.

"ஐயா!... நான் அப்படிச் சொல்லவில்லை!... பெரும்பான்மையினரான டெனிஷ்காரரையும், வெள்ளையரையும் பற்றித்தான் நான் சொன்னேன். நீங்கள் குறிப்பிட்ட நல்லவர்களுக்கெல்லாம் உங்களுடைய பேச்சு அவசியமேயில்லை! அவர்கள் உங்களுடைய பேச்சைக் கேட்டிருந்தால் உங்களை, என்னைப் போல்தான் எடை போட்டிருப்பார்கள்" என வசந்தன் தணிந்த குரலில் பதிலளித்தபோது, அவன் கூறியது புரியாமல் வசந்தனைப் பார்த்தார் சண்முகத்தார்.



"ஐயா!.... நாட்டிலை நடந்த பாரபட்சமான செயல்களுக்கு உதாரணங்காட்டி நீங்கள் பேசியபோதெல்லாம் நீங்கள், உங்களுடைய சமூகம் செய்த கொடுமைகள் என்றுதான் அடிக்கடி கூறினீர்களேயொழிய, ஒரு தடவையாவது நான் அந்தக் கொடுமைகளைச் செய்தேன், நான் அந்தக் கொடுமைகளை ஒழிக்க எதுவுமே செய்யவில்லை என்று உங்கள் தவறை ஒப்புக்கொள்ளாமல், பொதுப்படையாக உங்கள் சமூகத்தின் தலையிலே குற்றத்தைச் சுமத்தி, உங்களை நல்லவராகக் காட்டிக் கொண்டீர்கள்! மொத்தத்தில் உங்களுடைய பேச்சில் உண்மை இல்லை என்பதை மனிதாபிமானமுள்ள டெனிஷ்காரர் மிகவும் எளிதாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். உங்களை வைத்து எமது தமிழ்ச் சமூகத்தை அவர்கள் எடைபோட்டால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதை சண்முகத்தாரின் தலை குனிந்து கொண்டது. விழியோரங்களில் நீர் கசிந்தது.

அப்படியே சிலைபோல் உறைந்து உட்கார்ந்திருந்த சண்முகத்தாரின் மனதில் திடீரென, இயேசு சொன்ன இன்னுமொரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

'பழைய திராட்சை ரசத்தைப் புதிய துருத்திகளில் வார்த்து வைக்கக்கூடாது. அப்போது அது துருத்திகளைக் கிழித்துப்போடும். துருத்திகள் கிழிந்து போவது மாத்திரமல்ல, ரசமும் சிந்தி வீணாகிப் போகும்!'.

இவ்வளவு காலமும் அவருக்கு இயேசுவின் இந்த வாசகங்கள் புரிந்ததில்லை. ஆனால் இப்போது அது ஓரளவுக்குப் புரிவதுபோல இருந்தது. ஆம்! ஓரளவுக்குத்தான்!

அ. பாலமனோகரன்

## சரியான தீர்ப்பு

தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக ஒருவனைப் பிடித்து வந்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள்.

நீதிபதி கேட்டார்.

நீ சம்பவத்தன்று, அந்த கட்டிடத்தின் 2-வது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றது உண்மையா?

ஆமாங்க.

ஏன் அப்படிச் செய்தாய்?

ஏழாவது மாடிக்கு ஏறிப்போக சோம்பலாக இருந்ததுங்க....!

அதான் லிப்டு வசதி இருந்ததே.... அதில் ஏறி ஏழாவது மாடிக்குப் போயிருக்கலாமே?

போயிருக்கலாம்தான். ஆனா, லிப்டுல போகும் போது எனக்கு "கண்டம்" இருக்கிறதா ஜோஸ்யர் சொல்லியிருந்தாருங்களா.... அதான்...!

ஓஹோ....!


வெறுத்துப் போன நீதிபதி கடுப்புடன் கேட்டார்.

ஆகக்கூடி, நீ சாகணும்னு தீர்மானிச்சது நிஜம் தானே?

ஆமாங்க.

நக்கலாக, நீதிபதி தீர்ப்பு சொன்னார் இப்படி—

ஒரு குடிமகனின் நியாயமான ஆசையைத் தீர்த்து வைப்பது நீதிமன்றத்தின் கடமையாதலால் குற்றவாளி அவன் விரும்பியபடியே சாவதற்கு அனுமதித்து, மரண தண்டனை விதிக்கிறேன்.



## மகாத்மா காந்தியின் சத்திய சோதனையிலிருந்து...

★ ஒரு சன்னியாசி எலி உபத்திரவத்தைப் போக்க ஒரு பூனையை வளர்த்தார். பின் பூனைக்குப் பால் வேண்டுமே என்பதற்காகப் பசுவை வளர்த்தார். பின் பசுவைக் கவனிக்கு வேண்டுமேயெனக் கவலைப்பட்டு ஒரு பெண்ணைக் கொண்டுவந்தார். பின் அவளைத் தான் கவனித்து பெரும் குடும்பத்தரானார். இப்படித்தான் போகிறது நமது திட்டமில்லாத வாழ்வு.

★ மனிதனும் அவனுடைய செயலும் வெவ்வேறானவை. நற்செயலைப் பாராட்ட வேண்டும். தீய செயலைக் கண்டிக்க வேண்டும். செயலைச் செய்யும் மனிதர் நல்லவராக இருப்பினும் தீயவராக இருப்பினும் செயலின் தன்மைக்கு ஏற்றவாறு மரியாதைக்கும் பரிதாபத்திற்கும் உள்ளாகிறார்.

★ உண்ணாவிரதமும் ஆகாரக் கட்டுப்பாடும் என் வாழ்க்கையில் மிக முக்கியமானவை. நாவின் அவையில் அவாவுடையவனிடமே பெரும்பாலும் காம குரோதங்கள் இயல்பாக குடிகொள்கின்றன; என் விஷயத்தில் அவ்வாறே இருந்தது.

★ முகஸ்துதியாகப் பேசியோ அல்லது சுய மதிப்பிற்குப் பாதகமான வகையால் நடந்தோ ஒருவரைச் சமாதானப்படுத்திக் கொண்டு வாழ்வதென்பது எனது சுபாவத்திற்கே விரோதமானது.

# இசைக் கலையும் மக்களும்

*1. யாழ் 2. வீணை 3. கோட்டு வாத்தியம் 4. தம்புரா 5. வயலின் 6. புல்லாங்குழல் 7. நாகஸ்வரம் 8. கிளாரினட் 9. தவில் 10. மிருதங்கம்.*

இசையொலியின் பல நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும், இசையறிவில் வளர்ந்து இசையின் அழகைத்துய்ப்பதற்கும், சிறப்பாக மொழிகலவாத் தனி இசையின் (absolute music) மேன்மையை உணர்வதற்கும் இசைக் கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன.

இசைக்கருவிகளைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம்:

1— நரம்புக்கருவிகள் (தந்தி அல்லது தத வாத்தியங்கள்) (Chordophones).

2— துளைக்கருவிகள் (காற்று அல்லது சுஷிர வாத்தியங்கள். (Aerophones).

3— தோற்கருவிகள் (அவனத அல்லது கொட்டு வாத்தியங்கள். (Membranophones).


4— கன கருவிகள் (கஞ்சக்கருவிகள் Ldiophones அல்லது Auto phones).

யாழ், தம்புரா, வீணை, வயலின் கோட்டு வாத்தியம், மாண்டலின் முதலியவை நரம்புக்கருவிகளாகும். புல்லாங்குழல், நாகஸ்வரம், கிளாரினட் முதலியவை தோற்கருவிகளாகும். ஜால்ரா, குழித்தாளம், ஜலதரங்கம் முதலியவை கனகருவிகளாகும்.


2. அரங்கிசையில் மையமாக வைத்து வாசிக்கப்படும் கருவிகள்— வீணை, கோட்டு வாத்தியம், புல்லாங்குழல், நாகஸ்வரம், கிளாரினட், மாண்டலின், வயலின் ஆகியவை. துணைக்கருவிகள் வயலின், மிருதங்கம், தவில், கஞ்சிரா, கடம், மோர்சிங் ஆகியவை.

3. சுருதிக்காக உள்ள இசைக் கருவிகள் ஏக்தார், தோதார், துந்திணா, தம்புரா, ஒத்து, சுருதிப் பெட்டி ஆகியவை. தாளத்துக்கென்று உள்ள இசைக்கருவிகள் தவில், மிருதங்கம், கஞ்சிரா, கடம்,


தம்புரா




வில்யாழ்



சகோட யாழ்



வீணை



# கருவிகள்


மோர்சிங், ஜால்ரா ஆகியவை. இராகம் மட்டும் பாட்டுக்கென்று உள்ள இசைக்கருவிகள்– வீணை, கோட்டு வாத்தியம், புல்லாங்குழல், நாகஸ்வரம், வயலின், கிளாரினட், மாண்டலின் ஆகியவை.

4. இராகம் மற்றும் பாட்டோடு சுருதியும் சேர்ந்து ஒலிப்பதற்கு வசதியைக் கொண்டுள்ள இசைக் கருவிகள் வீணை, கோட்டு வாத்தியம், மகுடி, நெடுங்குழல். வீணையிலும், கோட்டு வாத்தியத்திலும் சுருதிக்காக 3 தந்திகள் உள்ளன; மகுடியில் சுருதிக்கென்று ஒரு குழாய் உள்ளது; நெடுங்குழலில் மேல்பாகம் சுருதிக் குழாயாகப் பயன்படுத்தப்படுகிறது. மேற்கூறப் பட்ட இசைக்கருவிகள் 'சகல' வாத்தியங்கள் என்று அழைக்கப் படுவதும் உண்டு. சுருதி ஒலிப்பதற்கு வசதியைக் கொண்டிராத இசைக் கருவிகள் வயலின், புல்லாங்குழல், நாகஸ்வரம், கிளாரினட், மாண்டலின் ஆகியவை. இவை 'நிஷ்கல்' வாத்தியங்கள் என்றும் அழைக்கப் படுவதுண்டு.


5– கையால் மட்டும் வாசிக்கப் படும் இசைக்கருவிகள் வீணை, கோட்டு வாத்தியம், வயலின், மிருதங்கம், தவில், கஞ்சிரா, கடம், ஜால்ரா, மாண்டலின் ஆகியவை. கையாலும் வாயாலும் வாசிக்கப் படும் இசைக்கருவிகள் புல்லாங் குழல். நாகஸ்வரம், கிளாரினட், மோர்சிங் ஆகியவை. மின்சக்தியால் இயக்கப்படும் இசைக்கருவிகள் மின்சக்தி தம்புரா, மின்சக்தி சுருதிப்பெட்டி ஆகியவை.

6– சில கருவிகள் ஒரு நேரத்தில் ஒரு சுரம்தான் வாசிக்கமுடியும். இத்தகைய கருவிகள் புல்லாங்குழல், நாகஸ்வரம், கிளாரினட் ஆகியவை; இவற்றை ஓரொலிக் கருவிகள் (ஏகத்வனி வாத்தியங்கள்) என்று அழைப்பதுண்டு. சில கருவிகளில் ஒரு நேரத்தில் இரண்டு மூன்று சுரங்கள் வாசிக்கமுடியும். இத்தகைய கருவிகள் வீணை, கோட்டு வாத்தியம், வயலின் முதலியவை. இவற்றைப் பல்லொலிக் கருவிகள் (பஹூத்வனி வாத்தியங்கள்) என்று அழைப்பதுண்டு.


**பைரவி**



மிருதங்கம்



புல்லாங்குழல்




கோட்டு வாத்தியம்




வயலின்



தவில்



நாகசுரம்



## ஜே. கிருஷ்ணமூர்த்தியின் எண்ணங்களிலிருந்து...

★ நம்மை நாம் என்னுமே மெய்யாகக் காண்பதில்லை. ஆகையால்தான் பிறர் மீது பழி சுமத்துகிறோம்.

★ உங்கள் மனம் ஊசியின் கூர்மையையும் வைரத்தின் வலிமையையும் பெற்றிருந்தால் மட்டுமே உங்களால் ஆழ ஊடுருவி ஆராயமுடியும்.

★ நாம் சில எண்ணங்களால் வழிநடத்தப்படுகிறோம். மீட்பிற்குக் கடவுளையும் மன அமைதி பெறுவதற்கு விதியையும் எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பதற்கு எதிர்காலத்தையும் மற்றும் பாதுகாப்பிற்கு இனி இருக்கும் வாழ்வையும் சார்ந்திருக்க வேண்டுமென எண்ணுகிறோம்.

★ வாழ்வதென்பது தற்காலத்தில் நிகழ்வதென்றும், இறப்பு என்பது ஏதோ பிற்காலத்தில் நெடுநாட்களுக்குப் பிறகு நடைபெற இருப்பதெனவும் எண்ணுகிறோம். அது தவறு. முடிந்துபோன ஒவ்வொரு நிமிடத்தையும் உள்ளத்தளவால் நீங்கள் சாகாமல் இருந்தால் உங்களால் வாழ முடியாது. இதைச் சரியானபடி உணர்ந்தால் இறப்பு தொலைவில் இல்லை. சாதலும் வாழ்தலும் ஒன்றே என்ற உண்மையை உணரமுடியும்.


எம் உறவுகளின் துயர் துடைக்க
எழுந்திடுவீர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன்
இணைந்திடுவீர் .
துயர் துடைப்போம்
உங்களை நாடிவரும்
தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களிடம்
உங்களால் முடிந்த உதவியை வழங்குங்கள்.

# நோபல் பரிசின் கதை

செ. செல்வன்

உலகிலேயே மதிப்பு வாய்ந்த விருதுகளில் விலை உயர்ந்ததாகக் கருதப்படுவது நோபல் பரிசுதான். நோபல் பரிசு பற்றி சுவையான தகவல்களும் பின்னணிகளும் ஏராளம் உண்டு.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபல் என்பவரின் பெயரால் நோபல் பரிசு அமைக்கப்பட்டது மிகப்பெரிய செல்வந்தரான அல்பிரட் நோபல் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார். பல்வேறு திறமைகளும் ஞானங்களும் நிறைந்த அறிஞராக அவர் திகழ்ந்தார். வேதியல் விஞ்ஞானியான அவர் மருத்துவராகவும் விளங்கினார். அழகான கவிதைகளை எழுதினார். சிந்தனைமிகுந்த கட்டுரைகளை எழுதி எழுத்தாளர் என்ற புகழையும் பெற்றார்.

அல்பிரட் நோபல் 1896–ஆம் வருடம் காலமானார். அவர் இறந்த பிறகு அவரால் எழுதி வைக்கப்பட்ட உயிலைப் பார்த்து குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர். காரணம் அவரது சொத்துக்களில் 15 லட்சம் ரூபாவை மட்டும் தமது குடும்பத்தினருக்கு எழுதி வைத்திருந்தார். மீதமுள்ள ஐந்து கோடி ரூபாவை மனித குலத்திற்கு நன்மை செய்வோருக்குப் பரிசாக ஒவ்வொரு ஆண்டும் வழங்க வேண்டும் என்று காணிக்கை செய்திருந்தார்.

அல்பிரட்டின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற அவரது குடும்பத்தினர் விரும்பவில்லை. அனைத்துச் சொத்துக்களையும் தாமே எடுத்துக்கொள்ள முயன்றனர். எனவே அரசாங்கம் தலையிட்டு, நோபல் நிறுவனத்தை அமைத்தது. அதன்மூலம் 1901–ம் ஆண்டு நோபல் பரிசு பிறந்தது.

நோபல் பரிசுக்காக அல்பிரட் நோபல் விட்டுச் சென்ற பணத்தின் இன்றைய மதிப்பு 110 கோடி ரூபா. 85 ஆண்டுகளாக வருடம் தோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டுவருகிறது. இயற்பியல் வேதியல் மருத்துவம் உயிரியல் இலக்கியம் சமாதானம் ஆகியவற்றுக்காக இப்பரிசு வழங்கப்படுகின்றது.

வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனி சோடியத்தைக் கண்டுபிடித்த கியூரி அம்மையார் இயற்பியல் மேதை ஐன்ஸ்டீன் ஆகியோரும் இலக்கியத்திற்கென பரிசு பெற்ற பேர்னாட்ஷா, ரவிந்திரநாத்தாகூர் ஆகியோரும் சமாதானம் மற்றும் மனித நேயசேவைக்கென பரிசு பெற்ற அல்பர்ட் சுவைட்சர், அன்னை தெரேசா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

நோபல் பரிசு என்பது அவ்வளவு எளிதில் வழங்கப்பட்டுவிடுவதில்லை. இலக்கியத்திற்கான குழுவில் 18 பேர் இருக்கிறார்கள். வேதியியலுக்கான குழுவில் 275 பேர் இருக்கிறார்கள். சமாதானத்துக்கான குழுவாக நோர்வே நாட்டு நாடாளுமன்றமும் செயற்படுகிறது.

ஒவ்வொரு வருடத்திற்கான நோபல் பரிசுக்கும் அதற்கு முந்தைய வருடத்திலேயே உலகம் முழுவதிலுமிருந்தும் பெயர்கள் சிபாரிசு செய்யப்படுகின்றன. ஏறக்குறைய 5000 பேர் சிபாரிசு செய்யப்படுகின்றனர். பெப்ரவரி முதல் திகதியில் இந்த எண்ணிக்கை 900 ஆக குறைக்கப்பட்டது. நோபல் பரிசுக் குழுவின் முன் 100 பேரின் பட்டியல் வைக்கப்படும். அக்டோபர் மாதத்தில் நோபல் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுக்களிடையே பலத்த வாக்கு வாதங்கள் நடைபெற்று இறுதியில் ரகசிய வாக்கெடுப்பின் மூலம் பரிசிற்குரியவர்களின் பெயர்கள் தீர்மானிக்கப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் ஐரோப்பாவே ஏராளமான நோபல் பரிசுகளைப் பெற்று வந்தது. அதற்குப் பிறகு அதிகமான நோபல் பரிசுகளைப் பெற்று வருவது அமெரிக்காதான். இதற்குக் காரணம் இரண்டாம் உலகப் போரின்போது இத்தாலியின் முசோலினியிடமிருந்தும் ஜேர்மனியின் ஹிட்லரிடமிருந்து தம் ஏராளமான விஞ்ஞானிகள் அமெரிக்காவிற்கு தப்பி ஓடியது தான் என்கிறார்கள். ஐன்ஸ்டீன் ஜேர்மனியைச் சேர்ந்தவர் என்றாலும் அமெரிக்காவில் குடியேறி நோபல் பரிசு பெற்றார்.

நோபல் பரிசு வழங்குவோர் சில நேரங்களில் கடுமையான விமர்சனத்திற்கும் உள்ளாக நேருகிறது. பலஸ்தீனரை சொந்த பூமியிலிருந்து விரட்டிய இஸ்ரேல் பிரதமர் மெனோசின் பெகினுக்கும் காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் இஸ்ரேலுடன் உறவு கொண்ட எகிப்து அதிபர் அன்வர் சதாத்திற்கும் பல்லாயிரம் பேரைக் கொல்ல ஆலோசனை வழங்கிய கிங்ஸ்லிக்கும் நோபல் சமாதானப் பரிசு முறைகேடாக வழங்கப்பட்டுள்ளன.

★★★

> புகழை எதிர்பார்த்து உழைக்காதே. அது உனக்குக் கிடைக்காமலே போகலாம். ஆத்மாவின் ஆனந்தத்திற்காக உன்பணியில் ஒன்றிவிடு. பிறகு ஒருவேளை நீ எதிர்பாராமலே புகழும் பொருளும் உன்னைத் தேடி வந்தாலும் வரலாம்.
>
> காக்ஸ்


ஓவியா
காத்திருந்த காதல்...
பழைய புதிய தமிழ் திரைப்படங்கள்
(வாடகை /விற்பனை) தென்னிந்திய
தொலைக்காட்சி (தொடர்) நாடகங்கள்
ஐங்கரன், பிரமிட், ரமி CDக்கள்
ஓடியோக்கள் இலங்கை இந்திய தமிழ்
சஞ்சிகைகள் விற்னையாகின்றன.
127A, EALING ROAD
ALPERTON, WEMBLEY HA0 4BP, LONDON.
(Sakoni Resturant மேல் மாடியில்)
Tel: 0181 - 903 4762, Mobile: 0958 762 645
வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்.
தபால் மூலமாகவும் உங்கள் தேவைகளை நிறைவு செய்யலாம்.

லண்டன் வாழ் மக்களிற்கு ஓர் அழைப்பு

# Protect
## Insurance Services Ltd.

226 Ealing Road, Wembley, Middlesex HA0 4QL.

**Tel: 0181 900 0075 Fax: 0181 795 1745**

**You Get Insurance Cover**

**in**

☛ Car ☛ Van ☛ House & Shop



Contact - Siva on

Call Now: 0181 900 0075

**FREE CAR & FIRST CLASS SERVICE ON ACCIDENT CLAIM**

# எழுத்தாளர்களிடம் சில பொறுப்புக்கள்

பாலம் சஞ்சிகையில் பல தரப்பட்ட விடயங்களையும் வெளியிட இருப்பதால் எழுத்தாளர்களிடம் இருந்து ஆக்கங்களை பாலம் சஞ்சிகை எதிர்பார்த்து நிற்கின்றது. கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற விடயங்களில் ஆர்வம், அனுபவம் உள்ளவர்கள் பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியவாறான கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்பிவைக்கவும்.

கட்டுரைகள், சிறுகதைகள் கணணியில் எழுதப்பட்டதாயின் 12 Pt–இல் 2,3 பக்கங்கள் [A4] – கையால் எழுதப்பட்டவையாயின் 3, 4 பக்கங்கள் [A4].

சிறிய கட்டுரைகள் ஒரு பக்கத்தில் கணணிப்பதிப்பு அல்லது இரண்டு பக்கங்கள் கையால் எழுதப்பட்டவை. இவை தவிர பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியதென நீங்கள் கருதும் விடயங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

ஓவியங்கள் வரையக்கூடியவர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு உங்களது ஆக்கங்களை வெளிக்கொணரவும்.

"கேட்டோம் சொன்னார்கள்" என்னும் பகுதியில் முக்கிய நபர்களை சந்தித்து "பாலம்" வாசகர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வருகிறோம். எனவே நீங்களும் கலை, அரசியல், இலக்கிய, விளையாட்டு, வைத்திய, பொறியியல் துறை சார்ந்தவர்களாக இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

PALAM PUBLICATIONS
SONDER PARKEN 10,ST: TV
7430 IKAST
DENMARK
Fax: 45 97 25 22 96

முழுப்பெயர்:–.............................................................................................

முகவரி: –.................................................................................................

..........................................................................................

தொலைபேசி: –..........................................................................................

சார்ந்த துறை:– .........................................................................................

குறிப்பு: –

# 15 மீட்டர் பறந்து துளையைத் தாண்டும் கார்!

தமிழத் திரைப்படங்களில் கார்கள் வானில் பறந்து விழுவதை அடிக்கடி பார்த்திருக்கிறோம். ஆனால் வானில் பறந்து, ஓர் குறிப்பிட்ட துளையினூடாக குறிவைத்துப் பறந்து வெளியே வருவதென்பது சாதாரண விடயமல்ல. அதை செய்து காட்டியிருக்கிறார் ஸ்பிரிங்கி என்பவர்.







ஸ்பிரிங்கியும் அவரது நண்பர்களும் இணைந்து 12 மீட்டர் உயரத்தில் பிரமிட் வடிவில் கார்களை அடுக்கி வைப்பார்கள். இவ்விதம் 15 கார்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கும். பிரமிட் வடிவின் உச்சியில் ஓர் கார் புகுந்து செல்லக்கூடிய துளை அமைக்கப்படும். பின்னர் ஸ்பிரிங்கி தனது தலைக் கவசம் உட்பட சகல பாதுகாப்பான உடைகளையும் தேகம் முழுவதும் அணிந்து கொள்வார். மலை யேறுவது போல அமைக்கப்பட்ட சரிவான ஓடுபாதையில் தனது 73–ம் ஆண்டு 'செவலெற்' காரை ஓடி வந்து 15 மீட்டர் தூரம் பறந்து துளையினூடாக வெளியே வந்து தரையில் விழுவார். உயிராபத்தான இந்தப் பறத்தலில் ஸ்பிரிங்கி பலதடவைகள் சரியாகவே பாய்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.





# 'ஸ்டியரிங்' இல்லை! அக்சிலேட்டர், பிரேக் கட்டைகளும் இல்லை! புதிதாக வுகிறது கார்!

'F 200 Imagination' என்பது இந்தக் காரின் பெயர். மேர்ஸடஸ் பென்ஸ் நிறுவனம் இந்த வகையான காரைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதன் விஷேடம் என்னவென்றால் இதற்கு ஸ்டியரிங்கோ அல்லது காலால் பிரயோகிக்கும்



அக்சிலேட்டர், வேகம், பிரேக் ஆகியவையும் கிடையாது. எல்லாமே சிறு அளவிலான பட்டன்களில் தயாரிக்கப்பட்டு அருகாக ஓர்




கைபிடியில் பதிக்கப்பட்டுள்ளன. எல்லாவிதமான அசைவுகளும் "எலக்ரோனிக்" முறையில் மையப் படுத்தப்பட்டுள்ளன. கதவுகளை பக்கவாட்டிலும் திறக்கலாம். மேற்புறமாகவும் திறக்க முடியும். வேகமாக ஓட, நிறுத்த திருப்ப, பின்புறமாக செல்லவென யாவற்றிலுமே இந்தக்கார் இப்போதுள்ள கார்களைவிட சிறந்ததாக உள்ளது. விபத்து நேர்ந்தால் "எயார்பாக்" முழுக்காரையுமே மூடி பயணிகளைக் காப்பாற்றிவிடும். இதன் விலை தீர்மானமாகவில்லை தீர்மானிக்கப்பட்டதும் சந்தைக்கு வந்துவிடும்.



# உலகின் இரண்டாவது பெரிய தொங்கு பாலம்

டென்மார்க் சின்னஞ் சிறிய நாடென்பதும் 500–ற்கும் மேற்பட்ட சின்னஞ் சிறிய தீவுகளாலும் யூலண்ட், பியூன், சேலண்ட் என்னும் மூன்று பெரும் நிலத்துண்டுகளாலும் அமைவுபெற்றுள்ளது. ஒரு நாடு தீவுக் கூட்டங்களால் அமைவு பெறுகின்றபோது அந்தத் தீவுகளை இணைப்பதற்கு பாலங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிவிடுகிறது. இந்த வகையில் டெனிஷ் மக்களின் நூற்றாண்டுக் கனவாகவும் அவசியமாகவும் இருந்து வந்தவை இரண்டு பிரதான பாலங்களாகும். இதில் ஒன்று யூலண்ட் எனப்படும் பெரும் நிலப்பரப்பையும், பியூன் என்னும் மத்திய தீவையும் இணைக்கும் பாலமாகும். இது ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது. மற்றய பாலம் மத்தியிலிருக்கும் பியூன் தீவையும் தலைநகர் அமைந்திருக்கும் சேலண்டையும் இணைக்க வேண்டிய பாலமாகும். இதை அமைப்பது சாதாரணவிடயமல்ல. ஆழ்கடலின் நடுவே பாலமிட வேண்டும். அவசரகால கப்பல் பயணங்களுக்காக தொங்கு பாலமாகவும் அமைத்தல் வேண்டும். பொறியியலாளர்களுக்கு இது ஓர் சவாலாக இருந்து வந்தது. அந்த மகத்தான சவால் நிறைவேற்றப் பட்டு உலகின் இரண்டாவது பெரிய தொங்கு பாலம் திறந்து வைக்கப்பட்டுவிட்டது.

இப் பாலம் திறக்கப்படும்வரை புகையிரதம் உட்பட, வாகனங்களெல்லாம் கப்பல்களில் ஏற்றப் பட்டே மறுபுறமாகக் கொண்டு செல்லப்பட்டு வந்தன. கப்பல் பயணத்திற்காக தரித்து நிற்க வேண்டியதும் *1* மணி நேரம் கப்பலில் பயணம் செய்ய வேண்டியதும் தவிர்க்க முடியாத வாழ்வியலாகிக் கிடந்தது. இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய வழியாக ஆழக்கடலின் நடுவே இளநீலக் கோடுபோல எழுந்து நிற்கிறது இந்தப் பாலம். இப்போது *20* நிமிடங்களில் கடந்து விடலாம். வேலை நடைபெறும்பொழுது எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்து இலக்கை எட்டித் தொட்டிருக்கிறார்கள். *1988* ஜூன் மாதம் *23*–ம் திகதி இதற்கான வேலைகளை அப்போதய போக்கு வரத்து மந்திரி எச்.பீ.கிளவுசன் ஆரம்பித்து வைத்தார். பத்து ஆண்டுகளில் எட்டுப் போக்கு வரத்து மந்திரிகள் வந்தனர் போயினர். பாலம் அமைக்கும் பணிமட்டும் துரிதமாகவே நடைபெற்று *14.06.98* ஞாயிறு பன்னிரண்டு மணிக்கு டென்மார்க்கின் மகாராணி இரண்டாவது மாக்கிரத வால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.



*1998*–ம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் பார்த்தால் இதன் உற்பத்திச் செலவு *29* மில்லியன் குறோணர்களாகும். *1624* மீற்றர் நீளமான இப்பாலம் *254* மீற்றர் உயரமானது. வாகனப்பாதை *70* மீற்றர் அகலமானது. பாலத்தோடு மட்டும் இது நின்றுவிடவில்லை பிரதான சாலையுடன் இதன்



மொத்த நீளம் 6611 மீட்டர்கள். பாலத்தின் பிரதான தூணின் உயரம் 254 மீட்டர். இணைப்பது, புகையிரதம் செல்ல 7.7 மீற்றர் அகலமும் 75 மீற்றர் நீளமான சுரங்கவழியுமாக பல பக்க வேலைகளும் இதனுள் அடக்கப்பட்டுள்ளன. ஒரு மில்லியன் கன மீற்றர் சீமெந்துத் தூண்கள், ஒன்றரை இலட்சம் தொன் இரும்பு, 80 ஆயிரம் தொன் இரும்புத் தகடுகள், 19 ஆயிரம் தொன் செப்புக்கம்பிகளையும் உள்ளடக்கியது இப்பாலம்.

டென்மார்க்கைப் போலவே தீவுக் கூட்டங்களால் ஆன நாடு ஜப்பான். அந்த நாடும் டென்மார்க்கைப் போல பிரமாண்டமான தொங்குபாலமொன்றை உருவாக்கி, இந்த ஆண்டுதான் அவர்களும் தமது பாதையைத் திறந்து வைத்தார்கள். அவர்கள்



கட்டிய தொங்கும் பாலமே உலகின் முதலாவது பெரிய பாலமாகும். இதன் நீளம் 3910 மீற்




றர்களாகும். இது மூன்று பிரிவுகளைக் கொண்டது 960+ 1990+ 960 என்னும் அளவுகளில் உள்ளது. அந்த உலகின் முதலாவது பெரிய பாலத்தையும் உங்கள் பார்வைக்குத் தந்துள்ளோம்.

## 400 பலூன்களை இணைத்து 3500 மீட்டர் உயரத்திற்குப் பறந்தார்

மனிதன் பல்வேறு விதமாக வானத்தில் பறக்கிறான். அவனால் இப்படியும் பறக்க முடியுமென நிரூபித்திருக்கிறார். இங்கிலாந்தைச் சேர்ந்த ஜன் அஸ்போல் என்ற பறக்கும் பலூன்களின் வீரன். மொத்தம் 400 ஹீலியம் வாயுவால் நிரப்பப்பட்ட சாதாரண பலூன்களை ஒன்றாக இணைத்து 3500 மீட்டர் உயரம்வரை பறந்து சென்றார். அப்படியானால் எப்படிக் கீழே இறங்குவது? இருக்கவே இருக்கிறது. ஒவ்வொரு பலூனாக வெட்டி வெட்டி விட்டால் அப்படியே மெல்லக் கீழே இறங்கி விடலாம்.








# பிரான்சில் 16–வது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்



இவ்வருடத்தின் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான 16–வது உலக உதைபந்தாட்டப் போட்டிகள் பிரான்ஸ் நாட்டில் ஆரம்பமாகிவிட்டது. கோடான கோடி மக்களின் மனத்தை கொள்ளை கொண்ட இவ்விளையாட்டு உலகில் அனைத்து நாடுகளிலுமே காணப்படுகிறது. முதல்முறையாக 1930–ம் ஆண்டு உருகுவேயில் ஆரம்பமாகி 16–வது தடவையாக பிரான்சில் காலடி வைக்கிறது இந்த உலகக்கிண்ணப் போட்டிகள். இதற்கு முன்னரும் 1938–ம் ஆண்டு பிரான்சில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

10.06.98 அன்று போட்டிகள் ஆரம்பமானபோதும் அதற்கு முதல் நாளான 09.06.98–இல் பங்குபற்றும் நாடுகளை வரவேற்கும் முகமாக ஆரம்ப வரவேற்பு விழாக்கள், இசைநிகழ்ச்சிகள் அவ்வவ் நாடுகளின் கலை, கலாச்சார நடன கொண்டாட்டங்கள் பிரான்ஸ் நாட்டில் அதிலும் தலைநகர் பாரிஸில் தடல்புடலாக நடத்தப்பட்டது. வரவேற்பு நிகழ்வுகளை தொடர்ந்து, தற்போதைய உலக

## மகத்தான ஆரம்பம்




சம்பியனும் அதிகதடவை உலக கிண்ணத்தை கைப்பற்றியதுமான பிரேசில் ஸ்கொட்லாந்தை புதிதாக அமைக்கப்பட்ட 80,000 இருக்கைகள் வசதிகொண்ட செயின் டெனிஸ் மைதானத்தில் 10.06.98 எதிர்கொண்டது. இப்போட்டியில் பிரான்ஸ் ஜனாதிபதி ஷிராக் அவர்களும் கலந்துகொண்டார். இதனைத் தொடர்ந்து குழுக்களுக்குள் போட்டிகள் நடைபெறுகின்றன. உலக மக்களால் பெரிதும் எதிர்





பார்க்கப்படும் றொனால்டோ, கார்லோஸ், கிலின்ஸ்மன், சமரானோ, மத்தியூஸ், ஓடேகா என பல முன்னணி ஆட்டக்காரர்களின் ஆட்டமும், யாரென்றே தெரியா மல் இலைமறைகாய்களாக மறைந் திருக்கும் பல புதிய வீரர்களின்



ஆட்டமும் பார்வையாளர்களுக்கு விருந்துபடைக்கும் என்பதோடு புதிய சாதனைகளை நோக்கியும் நகருகிற 16–வது உலகக்கிண்ணப் போட்டிகள். என்னதான் திறமை இருந்தாலும் அதனை மைதானத் தில் கோல் ஆக்கும் போதுதான் அதற்கு பெருமை ஏற்படும்.

பொன்.தாமோதரம்

## 98 உலகக்கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகள்

| | |
|---|---|
| பிறேசில் | நெதர்லாந்து |
| ஸ்கொட்லாந்து | பெல்ஜியம் |
| மொறோக்கோ | தென்கொரியா |
| நோர்வே | மெக்சிக்கோ |
| இத்தாலி | ஜேர்மனி |
| சிலி | அமெரிக்கா |
| கமறுன் | யூக்கோஸ்லாவியா |
| ஆஸ்திரியா | ஈரான் |
| பிரான்ஸ் | ருமேனியா |
| தென்னாபிரிக்கா | கொலம்பியா |
| சவுதி அரேபியா | இங்கிலாந்து |
| டென்மார்க் | டுனிசியா |
| ஸ்பெயின் | ஆர்ஜன்ரீனா |
| நைஜீரியா | ஜப்பான் |
| பரகுவே | ஜமேக்கா |
| பல்கேரியா | குரேசியா |


# 31.900 தீக்குச்சிகளில் ஓர் விளையாட்டரங்கு வடிவம்!

### நிறைவேற்றப் பத்து வருடங்கள் ஆயிற்று

பத்து வருடங்களாக தொடர்ந்து முயற்சித்து 31.900 தீக்குச்சிகளால் இந்த றக்பி விளையாட்டரங்கை வடிவமைத்திருக் கிறார் வேல்ஸைச் சேர்ந்த மைக் வல் போல் என்பவர். 32 வயதாகி விட்ட இவர் தனது வாழ்க்கை யில் பெரும்பகுதியை இழந்து, வேறெந்த வேலைகளிலும் ஈடு படாமல் ஒவ்வொரு தீக்குச்சியாக ஒட்டிஒட்டியே பத்து வருடங் களைத் தீர்த்திருக்கிறார். இவரது முயற்சியைப் பாராட்டி இந்தக் கைவினைப் பொருள் தற்போது றக்பி மியூசியத்தில் வைக்கப்பட் டுள்ளது. 450 மில்லியன் பிராங் கில் இதுபோல புதிய 'ஸ்ரேடியம்' தயாராகிறது. தீக்குச்சிகளால் உருவாக்கப்பட்ட வடிவத்தின் பெயர் "கார்டிவ்ஸ் உம்ஸ் பாக்"



புதிதாக உருவாகும் ஸ்ரேடியத் தின் பெயர் " மெலோனியம் ஸ்ரேடியம்". இது 1999–ல் கட்டி முடிக்கப்பட்டுவிடும். 80.000 பார் வையாளர்கள் இருந்து பார்க்க முடியும்.



# ஐரோப்பியத் திரைகளில்

இம்மாதம் ஐரோப்பியத் திரைகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தக்கூடிய தமிழ்த் திரைப்படங்கள் வந்ததாகக் கூறமுடியாது. ஆங்கிலத்தில் 'டீப் இம்பக்ற்' என்ற திரைப்படம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென முதலில் எதிர்பார்க்கப்பட்டது. அண்ட வெளியிலிருந்து பூமியை நோக்கிவரும் ஓர் எரிகல் தற்செயலாக அடையாளம் காணப்படுகிறது. இதை வான்வெளியில் வைத்து உடைப்பது எப்படி என்பது பற்றியே





கதை, இது போல சீன்கொனரி நடித்த 'மெற்றரர்' என்ற ஆங்கிலத் திரைப்படமொன்றும் சுமார் 20 வருடங்களுக்கு முன் வெளிவந்திருந்தது. எனினும் நம்மிடம் இருக்கும் அணுகுண்டுகளை வீணாக பூமியில் வீசாமல் பூமியை அழிக்கவரும் பிரமாண்டமான கல்லை உடைக்கப் பயன்படுத்தலாம் என்ற எண்ணத்தை 'டீப் இம்பக்ற்' ஆங்கிலத் திரைப்படம் குறிப்பிடுகிறது. எனினும் இதில் சில குறைபாடுகளும் உண்டு என்பதற்கேற்ப திரைப்படமும் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. டைற்றானிக் ஏற்படுத்திய சாதனைக் கல்லை எட்டிப்பிடிக்க முடியாது விழுகின்றன புதிய ஆங்கிலத் திரைப்படங்கள். இவை ஆங்கிலத் திரைப்படங்களின் நிலை.




## இனியவளே

தமிழ்ப் படங்களிலும் ஜீன்ஸ் காதலா காதலா ஆகிய திரைப்படங்களின் சரிவிற்குப் பின்னர்ல் சில திரைப்படங்கள் வந்துள்ளன. வித்தியாசமாகச் சொல்ல வேண்டும் என்ற உணர்வில் இனியவளே என்ற படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் சீமான். சிறிய இடைவெளிக்குப் பிறகு பிரபுவைக் காண்கிறோம். நம்புவதற்கு கஷ்டமான கதையாக இருக்கிறது. ஆயினும் உணர்வுகளாலும் மெல்லிய நடிப்பாலும் கதைக்கு உணர்வூட்டுகிறார்கள். சுவலட்சுமியும் பிரபுவும் போட்டி போட்டு நடிக்கிறார்கள். சுவலட்சுமியின் மரணமும் அவருடைய சகோதரி கீர்த்திரெட்டியை இறுதி



## ரத்னா

வழமையான பழிவாங்கும் பாணியில் மசாலா கதையுடன் ரத்னா படத்தைப் பார்க்க முடிந்தது. தந்தை வினுசக்கரவர்த்தியை அவமதிக்



கிறார் மகனான கசன்கான். இதனால் மனம் நொந்த சக்கரவர்த்தி தனது நாட்டாமைப் பதவியை மருமக னுக்கு கொடுக்கிறார். அவரை மகன் கசன்கான் கொலை செய்கிறார். அதைப் பார்த்துவிட்டுத் தப்பியோடும் முரளி பெரியவனாகி மறுபடியும் வருகிறார். பழைய குடியிருந்த கோயில் திரைப் படம்தான் நினைவுக்கு வருகிறது. பாடல்கள் ஓரளவு கேட்கக்கூடியதாயுள்ளன.

## ப்ரியமுடன்

பெரிய எதிர்பார்ப்புடன் வந்திருக்கிறது விஜய், கௌசல்யா, அஜித் சாகர், மணிவண்ணன் ஆகியோர் நடிப்பில் வெளியாகியிருக்கும் ப்ரிய முடன். கலர்கனவுகள் திரைப்படம்போல கண் மூடித்தனமாக காதலுக்கு சாவுமணியடிக்க முயலும் ஓர் திரைப்படம். கௌசல்யா மீது கண்டதும் காதல்



கொண்ட விஜய் காதலுக்காக முதலில் பொய் உரைத்து, படிப்படியாகப் பல தவறுகள் இழைத்து, கடைசியில் கௌசல்யாவின் தந்தையே கொலை செய்யுமளவிற்கு கண்மூடித்தனமான பாதையில் பயணிக்கிறார். விஜய் வில்லன் பாத்திரமாக நடிக்கும் கதாநாயகன். மணிவண்ணனும் உண்டு. ஐரோப்பிய நாடுகளில் இது விடுமுறைக்காலம். இந்தத் திரைப்படங்கள் விடுமுறைக்கு விருந்தாகு மெனக் கூறமுடியவில்லை. ஆயினும் நாமெல்லாம் பார்க்காமலாவிடப் போகிறோம்.

யில் மணமுடிப்பதும் பல தடவைகள் பார்த்த சங்கதிகளே எனினும் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்ற மாதிரி இருக்கிறது.



## அவள் வருவாளா

இதுபோலவே அவள் வருவாளா? என்னும் திரைப்படமும் வந்திருக்கிறது, அஜீத், சிம்ரான், கவுண்டமணி செந்தில்,



சுஜாதா ஆகியோர் வருகிறார்கள். சிம்ரான் ஏற்கனவே திருமணமாகி கணவனிடம் சித்திரவதைப்படுகிறார். பின் கொடியவனான சிம்ரானின் கணவனான பப்லுவை தாய்ப் பாத்திரம் ஏற்ற சுஜாதா கொலையே செய்துவிடுகிறார். கவுண்ட மணி, செந்தில் நடித்துள்ள படமொன்று எஸ்.ஏ.ராஜ்குமாரின் இசையுடன் வந்திருக்கிறது.

# நாடும் மக்களும்







## தென்னாபிரிக்கா

நிலப்பரப்பு – 1,127,000ச.கிமீ
சனத்தொகை – 40,774,000
தலைநகர் – கேப்ரவுண்
நாணயம் – ராண்ட்
ஏற்றுமதிப் பொருட்கள் – தங்கம், வைரம், உருக்கு, உணவுப் பொருட்கள், இயந்தி உபகரணங்கள்.
அரசாங்கம் – பல கட்சி குடியரசு



தென்னாபிரிக்கா நீண்ட மலைத்தொடர்களையும் கணவாய்களையும் சமதரைகளையும் கொண்ட அழகான நாடு. 1800–களில் பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்ட தென்னாபிரிக்கா ஆபிரிக்காக் கண்டத்தின் செல்வந்த நாடாக விளங்கியது. 1652–களில் டச்சுக்காரர் கேப்ரவுண் பகுதியில் குடியேறிக் கொண்டனர்.

நீண்டகாலம் வெள்ளையர் ஆட்சியில் இருந்த தென்னாபிரிக்காவில் 1994–ல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்று கறுப்பினத்தவர் ஆட்சியைக் கைப்பற்றினர். 1800–களில் தமது சுதந்திரத்தை இழந்த தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்களின் சுதந்திரத்துக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா 1994–இல் தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற பெயரைப் பெற்றுக் கொண்டார்.



தென்னாபிரிக்காவே உலகத்தில் அதிகூடுதலான வைரத்தை ஏற்றுமதி செய்யும் நாடாகவுள்ளது.

எனினும் பல இலட்சக்கணக்கான கறுப்பினத்தவர்கள் தற்போதும் உரிய கல்வி இல்லாமலும் போதிய மருத்துவ வசதி இல்லாமலுமே வாழ்கின்றனர்.

தென்னாபிரிக்காவில் அரசியல் மொழிகளாக Afrikaans, English, Ndebele, North Sotho, South Sotho, Swazi, Tsonga, Tswana, Venda, Xhosa, Zulu ஆகியன உள்ளன.



## ஐரோப்பாவில் இந்தியக் கலைஞர்கள்!
## வை.ஜி. மகேந்திரா



வை.ஜி. மகேந்திரன் தன்னுடைய நாடகக் குழுவினருடன் வந்திருந்தபோது அனுமானித்துக் கொண்ட விடயங்கள் இவை. ஒரேயொரு நாடகத்தில் அவர் ஒன்பது மாறுபட்ட வேடங்களில் நடிக்கவேண்டும். ஒரு இந்திய மேடை நாடகத்திற்குரிய நடிகர் பட்டாளமே அவருடன் வந்திருந்தனர். இவர்களுடன் பாடசாலை அதிபரான அவரின் தாயார், மகள், மனைவி சகிதம் வந்திருந்தார். அமெரிக்காவில் ஒருமாதம் நாடகம் நடத்திவிட்டு வழியில் ஐரோப்பாவில் இறங்கியிருந்தார்கள். வை.ஜி. மகேந்திரனும் சூப்பர்ஸ்டார் ரஜனிகாந்தும் திருமண முறையில் சகபாடிகள் என்பது அப்போதுதான் தெரிந்தது. ரஜனியின் மனைவியும் மகேந்திராவின் மனைவியும் பஞ்சு அருணாச்சலத்தின் பிள்ளைகள் என்று கூறினார்கள்.

நாடகத்தை இவர்கள் எப்படி ஆரம்பிக்கிறார்கள் என்று அவதானித்தோம். வை.ஜி. மகேந்திரனின் தந்தையார் ஓர் பழைய நாடக நடிகர். வை.ஜி. நாடகம் தொடங்கிய போது பின்னணி இசையுடன் ஒருவர் இருந்தார். அவர் சொன்னார் சாதாரண நாட்களில் நான் அவருடைய கார் சாரதி . நாடகம் நடந்தால் பின்னணி இசை கொடுப்பேன் என்றார் சிரித்தபடி. ஒப்பனையாளர் ராஜ்குமார் இரண்டு மூன்று நிமிட இடைவெளியில் ஒப்பனைகளை மின்னல் வேகத்தில் மாற்றி நாடக மேடையிலேயே ஒருவரை ஒன்பது வேடங்களில் மாற்றி வியப்பூட்டியது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. எல்லோருமே பகுதிநேரக் கலைஞர்கள் அத்தனை பேரையும் நாடகப் பொருட்களையும் தனியாகப் பராமரித்து வழிநடத்தினார் மகேந்திரா.

மாலையில் தமிழீழ நிகழ்வுகளின் ஒளிப் பேழையைப் போட்டுக்காட்டினோம். மௌனமாக இருந்தார். “இப்படியெல்லாம் நடக்குதா நமக்குத் தெரியாதே!” பின்னாலிருந்து சொன்னவர் வை.ஜி. மகேந்திராவின் தாயார்.

# வாசன் அச்சகம்

**45C, Crusoe Road, Mitcham, Surrey CR4.**

**Tel: 0181 646 2885**

**நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் ......**

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வடிவத்தில்
தரமாகவும், விரைவாகவும், மலிவாகவும் குறித்த நேரத்தில்
பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்.



**Wedding Cards, Letter Heads, Business cards,
Colour Leaflets, Receipt Pads, Restaurant Menus,
Arangata Broacher, Invoice, etc...**

**We specialists in colour booklets, magazines**

# GLOBAL TAMIL VISION

G.T.V

" திரையுலகின் புதிய வரவு "

" திரையுலகின் புதியதோர் உதயம்"

" திரையுலகின் புதியதோர் நிறுவனம்"




**Global Tamil Vision**
**95, Avenue Jean Jaures**
**93300 Auber Villiers**
**France.**
**Tel: (33) 148 33 20 88**


அச்சுப் பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885